Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

உள்ளே...

- பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்களா - பக். 5
- அவுஸ்திரேலியா நோக்கிச் செல்லும் இலங்கை அகதிகளின் நிலை என்ன? - பக். 16

விலை : ரூபா 20.00

செய்தி - 38 | ஜூன் 18-24, 2016 | பக்கம் - 20

# பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்க சந்தர்ப்பம் இல்லை

## டாக்டர் பாலித கோஹண



(கொழும்பு)

மீண்டும் இந்த நாட்டிலே பயங்கரவாதம் தலை தூக்க சந்தர்ப்பம் இல்லை என்று தான் நான் கருது கின்றேன். எழுபதுகளில் நிலவிய நிலைமை இன்று இல்லை என்று தான் எண்ணுகின்றேன்.

"எழுபதுகளில் தமிழர்கள் அரசுடன் மோதிக் கொண்டே இருந்தார்கள். அவர்களது கோரிக் கையை அன்றைய அரசாங்கங்கள் கவனத்தில் எடுத் துக் கொள்ளத் தவறி விட்டன. படிப்படியாக தமிழர்கள் அரசாங்கத்தை எதிர்க்கும் போக்கு தீவிரமடையத் தொடங்கியது. சில நாடுகளும் வெளிநாட்டிலுள்ள சக்திகளும் தமிழரின் எதிர்ப் புக்கு ஆதரவும் வலுவும் ஊற்றின" என்று டாக்டர் பாலித கோஹண கூறினார்.

02 இல்

# நெடுந்தீவு மக்களின் பயணச் சிக்கல்




(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானுக்கு வருவதில் மக்கள் மிகவும் சிரமம் அடைகிறார்கள். கடல் மார்க்கமான அவர்களின் பயணத்திற்கு போதிய படகுச் சேவை இல்லை. தற்சமயம் குமுதினி என்ற ஒரே ஒரு படகு தான் ஓடிக்கொண்டிருக்கின்றது.

இந்த படகு காலை 7.30 மணிக்கு நெடுந்தீவி லிருந்து புறப்பட்டு குறிகட்டுவான் வந்து மீண்டும் 9.30 மணிக்கு நெடுந்தீவு செல்கின்றது. பின்னர் நெடுந்தீவிலிருந்து 2.30 க்கு குறிகட்டுவான் புறப் பட்டு மாலை 4.30 க்கு நெடுந்தீவுக்கு செல்கிறது.

நெடுந்தீவு - குறிகட்டுவான் படகுப் பயணத்திற்கு ஒரு மணிநேரம் தேவைப்படுகிறது. 2 மாதத்திற்கு முன்பு "வடதாரகை 2" என்ற ஒரு படகை கடற் படையினர் நடத்தி வந்தனர்.


02 இல்

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை நிலத்தில் 400 குடும்பங்களை குடியேற்ற திட்டம்


(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உள்ள 65 ஹெக்டேயர் நிலத்தில் அகதி முகாம்க ளில் தங்கியிருக்கும் 400 குடும்பங்களுக்கு காணி களை வழங்க சிறைச்சாலை சீர்திருத்தம், மீள் குடி யேற்றம் மற்றும் இந்து விவகார அமைச்சர் டி. எம். சுவாமிநாதனின் கோரிக்கையை மந்திரி சபை அங் கீகரித்துள்ளது.

18 இல்



# கடலில் தவிக்கும் இலங்கை தமிழர்களுக்கு என்ன தீர்வு



(கொழும்பு)

இந்தோனேஷியா வள்ளத்தில் இருந்த 17 பெண் களும் வள்ளத்தில் இருந்து இறங்க முயற்சித்த போது இந்தோனேஷிய பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்சிச்சூடு நடத்தினார்கள். இல ங்கை தமிழ் பெண்கள் எவ்வளவோ மன்றாடியும் இந்தோனேஷியா பொலிஸார் இரங்கவில்லை. ஏணி மீது ஏற்றி அவர்களை மீண்டும் வள்ளத்தில் கட்டாயப்படுத்தி ஏற்றிவிட்டார்கள்.

02 இல்

# கச்சதீவை மீட்க

## மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்


(சென்னை)

கச்சதீவில் தமிழக மீன வர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை உறுதி செய்யப் படும். இலங்கை தமிழர் விவ காரத்தில் முதல்வர் சிறப் பாக செயல்படுகிறார். இல ங்கை தமிழர்களுக்கு சம உரிமை சமவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் ரோசய்யா தெரிவித்தார்.



தமிழகத்தின் 15 ஆவது சட்டசபை கூட்டத் தொடர் ஆளுநர் உரையுடன் தொட ங்கியது. கூட்டத் தொடரை துவக்கி வைத்து பேசிய ஆளுநர் ரோசய்யா தனது உரையில் பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து உரை யாற்றினார். அப்போது பேசிய அவர் மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு நிரந்தர தீர்வு காணப்படும். கச்சத்தீவை மீட்க மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தும் என்றார்

## கொண்டோடிச் சுப்பர்



தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk

## வள்ளத்தில் வாடிவதங்கும் 44 இலங்கை அகதிகளை காப்பாற்றவும்

சென்ற 14 ஆம் திகதி இந்தோனேசியாவின் ஆசே மாவட்டத்திலுள்ள லொக்கன்கா கடற்கரைப் பிரதேச பகுதியில் கரை யொதுங்கிய வள்ளத்திலுள்ள 44 இலங்கையர்களையும் என்ன செய்வதென்று தெரியாமல் இந்தோனேசியா தடுமாறுகின்றது.

ஆரம்பத்தில் இந்தக் கப்பிலில் வந்த 17 பெண்கள் அதில் ஒரு பெண் நிறைமாதக் கர்ப்பிணி, 9 சிறுவர்கள். மொத்தமாக 44 இலங்கையர்களையும் என்ன செய்வதென்று தெரியாமல் இந்தோனேசியா தடுமாறுகிறது. ஆரம்பத்தில் இவர்களுக்குத் தேவையான உணவுகள் மற்றும் வள்ளத்தைப் பழுது பார்த்து இதற்குத் தேவையான எரிபொருளையும் நிரப்பி அந்த வள்ளத்தை பாதுகாப்பாக சர்வதேச கடலில் விடுவது என்று முடிவு செய்தது.

ஆனால் இந்த முடிவில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த வள்ளம் இந்தியாவிலிருந்து புறப்பட்டுள்ளது. இந்தியாவின் அகதி முகாமில் தங்கியிருந்த தமிழர்களே இந்த வள்ளத்தில் அவுஸ்ரேலியாவை நோக்கி பயணம் செய்துள்ளார்கள்.

1970 களிலிருந்து தமிழர்கள் பாக்கு நீரிணையைக் கடந்து இராமேஸ்வரம் சென்று தமிழ் நாட்டில் இவர்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள். இன்று வரை இந்தியா அரசாங்கம் இவ் வாறு வாழும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழரை அகதிகளாக நிர்ணயித்து அகதி அந்தஸ்து கொடுக்க முன்வரவில்லை.

இவ் வாறு 77க்கு மேற்பட்ட அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களை இலங்கை அரசு மீது தனது செல்வாக்கைப் பிரயேபகிப்பதற்காக இந்திய அரசு இவர்களை ஒரு பகடைக்காயாகத் தான் பிரயோகித்து வருகிறது.

எனவே இலங்கையில் உயிர் ஆபத்து எனக்கருதி இந்தியா சென்றவர்கள் தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களில் ஆடு, மாடுகளைப் போல் வாழ்ந்தவர்கள் தமது வாழ்வை வளப்படுத்த அவுஸ்ரேலியா செல்கின்றனர்.

அவர்களது வள்ளம் ஆசே பகுதியில் சென்ற 14 ஜூன் மாதம் கரை தட்டிற்று. அவர்களது அவுஸ்ரேலிய பயணம் தடைப்பட்டது. அவர்களிடம் தேவையான கடவுச் சீட்டுக்கள் இல்லாததால் 44 பேரையும் இந்தோனேசியா தனது நாட்டுக்குள் இறங்க அனுமதிக்கவில்லை.

எனவே அவர்களை சர்வதேச கடல் எல்லைக்குள் விடுவதே இந்தோனேசியா செய்யக் கூடிய ஒரே ஒரு சரியான காரியமாகும். அவ்வாறு செய்யாமல் கடந்த 24 நாட்களாக வள்ளத்துக்குள்ளேயே இருந்து சிரமப்படுபவர்களை மீண்டும் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பும் இந்தோனேசியாவின் செயல் ஒரு கொடூரமானதும், கண்டனத்திற்குரியதும் என்று தான் கூற வேண்டும்.

எனவே ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கு பொறுப்பான உயர் ஸ்தானிகர் இந்த 44 அகதிகள் விவகாரத்தில் தலையிட வேண்டும் என்றும் அவர்களை வேறொரு நாட்டிற்கு உதாரணமாக துபாயில் தங்க வைத்து அகதிகளை ஏற்கும் மேற்கத்தைய நாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என தினச்செய்தி கேட்டுக் கொள்கிறது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## நெடுந்தீவு மக்களின் ...

இந்த படகு காலை 8.00 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து புறப்பட்டு நெடுந்தீவை வந்தடையும். அதன் பின்னர் மாலை 4.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து புறப்பட்டு குறிகட்டுவான் வந்தடையும்.

அனேகமாக இந்த படகில் உல்லாசப் பயணிகளே பயணம் மேற்கொள்கிறார்கள். இப் படகு 2 மாதமாக திருத்த வேலைகளுக்காக திருகோணமலை எடுத்துச் செல்லப்பட்டதால் இப் படகுச் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

யுத்த காலத்திற்க முன் வீதி அபிவிருத்தி அதிகார சபை "வலம் புரி", "வடதாரகை", "மணிமேகலை" என்ற வள்ளங் களை சேவையில் அமர்த்தி யிருந்தது. இந்த வள்ளங்கள் எல்லாம் இரும்பால் செய்யப்பட்டவை. இப் பொழுது கடற்படை முகாம் அமைத்துள்ள நிலாங்காடுவில் இந்த வள்ளங்கள் திருத்துவதற்கான படகுகள் திருத்துமிடம் அமைந்துள்ளது. ஆனால் தற்சமயம் அந்த இடத்தில் போசனசாலையும். ஜெற்றியும் அமைக்கப்பட்டுள்ளது. கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டுவிட்டது.

குமுதினிப் படகு மரத்தினால் செய்யப்பட்டதனால் பாரிய திருத்த வேலைகள் செய்யத் தேவையில்லை. இயந்திரக் கோளாறு மட்டுமே ஏற்படும். படகுக்குள் இருந்தே அத்திருத்த வேலையை செய்து விடலாம். குமுதினிப் படகை ஞாயிற்றுக் கிழமைகளில் சேவையில் விடுவதில்லை. அன்று உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காக நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் வைத்திருக்கும் வள்ளம் மற்றும் தனியாரின் 2 வள்ளங்களுமே சேவையில் ஈடுபடும்.

மேலும் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் ரூபா 150 மில்லியனில் 80 பேர் பயணிக்கக் கூடிய ஒரு வள்ளம் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த வள்ளம் நெடுந்தீவு - குறிகட்டுவான் பயணிகள் சேவைக்கு எதிர்வரும் ஜூலை மாதம் சேவைக்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பயங்கரவாதம் ...

டாக்டர் பாலித கோஹண அவுஸ்ரேலியா நாட்டின் பிரஜையாக இருந்த போது அந்த அரசாங்கம் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையில் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தப் பகுதிக்கு பொறுப்பாளராக இருந்தார். பின்னர் இலங்கை அரசாங்கம் அவரை இந்த நாட்டில் சேவைபுரிய அழைத்தது.

அதனையடுத்து ஏப்ரல் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ஜனவரி 2007 ஆம் ஆண்டு வரை இலங்கையில் சமா தான ஒருங்கிணைப்புக்கு பொறுப்பாளராக பதவி ஏற்றார். இதன் பின்னர் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை வெளி விவகார அமைச்சின் செயலாளராகவும், 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக நியூயோர்க்கில் கடமை புரிந்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் "இன்று நிலமைகள் மாறிவிட்டது. முக்கிய பயங்கரவாத அமைப்பு இலங்கையில் அழித்தொழிக்கப்பட்டு விட்டது. அதுமாத்திரமல்லாமல் பாதுகாப்பு படையினர் உசாராக இருந்து தங்களின் கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்," என்றும் கூறினார்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் போது 40,000 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. அது பற்றி பாலித கோஹணவை கருத்துக் கூறக் கேட்ட போது, அதைத் தான் முற்று முழுதாக மறுக்கின்றதாக கூறினார்.

"இதுவரை யாரும் இவ்வளவு தொகையான மக்கள் இறந்ததாக பெயர் விபரம் தரவில்லை" எனவே 40,000 ஆயிரம் என்பது தவறானது.

உண்மை என்னவென்றால் ஜனதா விமுக்தி பெரமுனே நடத்திய போராட்டத்தில் (1971, 1987) காலப் பகுதியில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கையையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையையும் ஒன்று சேர்த்தே 40,000 ஆயிரம் என்று கூறுகிறார்கள் எனக் கருதுகிறேன்.

மேலும் காணாமல் போனவர்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு வெளிநாட்டு நீதிபதிகள் வருவதனை ஏற்க முடியாது. என்று கூறினார்.

இந்த மாதிரியான விடயங்களை எமது நீதிபதிகளால் வெளிநாட்டு நீதிபதிகளின் துணை இல்லாமலேயே சிறப்பாக கையாள முடியும்.

எமது சட்ட வல்லுனர்கள் சர்வதேச அரங்கிலும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையிலும் மற்றும் பல வெளிநாடுகளிலும் நீதித் துறையில் சிறப்பாக செயற்பட்டுள்ளார்கள், இன்றும் செயற்பட்டு வருகிறார்கள். எனவே இந்த அடிப்படையில் ஜனாதிபதி அவர்கள் கூறுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மேலும் இப்போது என்ன செய்கிறீர்கள் என்று கேட்டபோது நான் நல்ல வாழ்க்கை ஒன்றை தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இந்த அரசு என்னுடைய சேவையை கேட்ட போது இந்த நாட்டிற்காக சேவையாற்றினேன். என்னைப் பொறுத்த வரை இந்த நாட்டிற்காக சிறப்பாக சேவையாற்றியுள்ளேன். மீண்டும் இந்த நாட்டிற்கு எனது சேவை தேவை என அழைத்தால் சேவை செய்ய நான் தயாராக இருக்கின்றேன் எனக் கூறினார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கடலில் தவிக்கும்...

இந்த சோக நாடகம் சம்பந்தமாக சிறைச்சாலை சீர்திருத்தம் மீள்குடியேற்றம் புனர் நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவலக அமைச்சின் செயலாளர் வி. சிவஞானசோதியின் கவனத்திற்கு தினச்செய்தி அவசர அவசரமாக கொண்டு வந்த போது இந்த விடயம் ஏற்கனவே தங்கள் கவனத்திற்கு வந்துவிட்டது என்றார். அத்துடன் இந்த பிரச்சினை சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சுடன்தொடர்பு கொண்டு ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறினார். இந்த பிரச்சனைக்கு மிக விரைவில் இலங்கை அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும் என தினச்செய்தி வலியுறுத்துகிறது.

சென்ற 14 ஆம் திகதி, நிறைமாத கர்ப்பிணிப் பெண் உட்பட 17 பெண்கள், 9 சிறுவர்கள் மொத்தமாக 44 இலங்கையர்கள் இந்திய கொடி ஏற்றி சென்ற வள்ளத்தில் அவுஸ்ரேலியா நோக்கி புறப்பட்டார்கள்.

இந்தியாவில் இருந்து புறப்பட்டு அவுஸ்ரேலியா செல்லும் வழியில் பலத்த காற்று வீசியதாலும், இயந்திர கோளாறு ஏற்பட்டதாலும் இந்தோனேஷியாவின் ஆச்சே மாகாணத்தின் லொஹொங்கோ கடற்கரை பகுதியில் இருந்து 300 மீற்றர் தொலைவில் வந்து கரைதட்டி நின்றது.

இந்த வள்ளத்தில் வந்த 44 இலங்கையர் இந்தியாவில், நீண்ட காலமாக அகதி முகாமில் தங்கியிருந்தார்கள். இவர்கள் மீண்டும் இந்தோனேஷியாவில் இருந்து இந்தியாவுக்கு பாதுகாப்புடன் அழைத்து



சென்று விடுவது என்பது மிகவும் பாரதூரமான விளைவு ஏற்படும் விடயமாகும்.

இவர்கள் மீண்டும் இந்தியா சென்றால் இவர்கள் உயிருக்கு யாராலும் உத்தரவாதம் கொடுக்க முடியாது.

எனவே வள்ளத்தில் வாழ்க் கொண்டிருக்கும் 44 இலங்கை தமிழர்களையும், அமைச்சர் திரு. சிவஞானசோதியின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். அவர் வெளிவிவகார அமைச்சுடன் கலந்து கொண்டு வந்து தீர்மானம் எடுப்பதாக தினச்செய்திக்கு கூறினார்.

# நிதி குற்ற புலனாய்வுக்கு பதிலாக நிரந்தர அமைப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய நிதி குற்றப்புலனாய்வு பிரிவின் ஆயுட்காலம் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்த நிதி புலனாய்வு பிரிவு 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதி குற்ற புலனாய்வு பிரிவு அன்று பொலிஸ் மாஅதிபரால் விசேட வர்த்தகமானி மூலம் அறிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

இந்த பிரிவு பாரிய பொருளாதார நிதி மோசடிகள், அனுமதி இல்லாமல் ஆரம்பமான பாரிய திட்டங்கள், பொது ஸ்தாபனங்களில் ஏற்பட்ட நிதி மோசடிகள், தேசிய பாதுகாப்புக்கு எதிரான நிதி மோசடிகள், சட்டவிரோதமாக பணங்கள் சேர்த்தல் பற்றி ஆராய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

இது வரையில் இந்த நிதி மோசடி பிரிவு 44 பாரிய குற்றச் சாட்டுகளை விசாரித்துள்ளது. இது சம்பந்தமாக வழக்குகள் தொடுப்பதற்கு சட்டமா அதிபர் காரியாலயத்திற்கு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிதி மோசடி பிரிவை மீண்டும் புதுப்பிக்காமல் இந்த நாட்டின் சட்டம் மூலம் அதே மாதிரியான ஒரு அமைப்பை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று மந்திரி சபை பேச்சாளர் டாக்டர் ரஜித்த சேனாரட்ண கூறியுள்ளார்.

இது சம்மந்தமாக, அவர் மேலும் பேசுகையில் 2015 ஆம் ஆண்டு ஜன வரி மாதம் நாங்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், இவ்வாறான நிதி மோசடிகளை விசாரிப்பதற்கு, அமைப்பு ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று கூறியிருந்தோம். அதன் பிரகாரம், நிதி மோசடி விசாரணை பிரிவை ஆரம்பித்தோம். வருங்காலத்தில் ஓர் நிரந்தரமான விசாரணை அமைப்பை நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்க உள்ளோம்.

இதற்கு தேவையான மந்திரிசபைக்கான அறிக்கையை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மந்திரி சபைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதை அடுத்து, இந்த விசேட அமைப்பு ஐந்து அல்லது ஆறு மாதங்களில் ஆரம்பமாகிவிடும் என்று மந்திரி சபை பேச்சாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

# குளவி கொட்டி ஆறுபேர் பாதிப்பு



(பெருமாள்)

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லிந்துலை மவுஸ்ஸாஎல்ல தோட்டத்தில் கடந்த வாரம் காலை தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த ஆறு பேர் குளவிகொட்டுக்கு இலக்காகி லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அப்பகுதியிலிருந்த மரம் ஒன்றிலிருந்து கலைந்து வந்த குளவிகளே இவ்வாறு தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் நான்கு பேர் சிகிச்சை மேற்கொண்டு வீடு திரும்பி விட்டனர். இருவர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அக்கரப்பத்தனைக்கு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய விஜயம்

(கிஷாந்தன்)

அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு மின்வலு மற்றும் வலுசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கடந்த வியாழக்கிழமை விஜயம் செய்தார்.

ஆலயத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஆலய அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை ஆலய நிர்வாகசபை உறுப்பினர்களிடம் வழங்கி வைத்தார்.

மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்த அமைச்சர்: "இன்று நாட்டில் சமாதானம் ஏற்பட்டதன் காரணமாக நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்றோம். ஆலயத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி பணிகளுக்கு என்னால் முடிந்த உதவிகளை மேற்கொள்வேன்.

நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதன் மூலம் எமது எதிர்கால சிறுவர்களுக்கு சிறந்த நாட்டை உருவாக்க முடியுமென அவர் இதன்போது தெரிவித்தார்.

# புதிய வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் வைபவம்

(கிஷாந்தன்)

கொட்டகலை மேபீல்ட் தோட்டத்தில் கடந்த காலங்களில் மண்சரிவு அபாயத்தினால் பாதிக்கப்பட்ட 16 குடியிருப்பாளர்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்க கடந்த வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் வைபவ ரீதியாக அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.


மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் சுப நேரத்தில் அடிக்கல் நாட்டி வைத்தார்.

இவ் வைபவத்தில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான எம்.உதயகுமார்,



சோ. ஸ்ரீதரன், சிங். பொன்னையா, ஆர். ராஜாராம், மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் ஏ. லோறன்ஸ் என பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டதை படங்களில் காணலாம்.

# சோமவங்ச அமரசிங்க காலமானார்



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவரும் மக்கள் சேவைக் கட்சியின் தலைவருமான சோமவங்ச அமரசிங்க (73) காலமானார்.

2014 ஆம் ஆண்டு சோமவன்ச அமரசிங்க மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பதவியிலிருந்து விலகியதுடன், கட்சியிலிருந்தும் விலகியுள்ளார்.

விஜேவீரவுக்கு பிறகு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக சிலர் பணியாற்றியிருந்தாலும் அந்த கட்சியின் நான்காவது தலைவரான சோமவங்ச அமரசிங்க. சில தசாப்தங்கள் அந்த கட்சியின் தலைவராக பணியாற்றினார். இலங்கை அரசியலில் அவரது பங்களிப்பு வரலாற்றில் பதியப்படக் கூடியது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி தனது சம்பிரதாய கொள்கைகளுக்கு புறம்பாக செயற்படுவதாக குற்றம் சுமத்தி அந்த கட்சியில் இருந்து விலகிய சோமவங்ச, மக்கள் சேவை என்ற கட்சியை ஆரம்பித்து புதிய பயணத்தை ஆரம்பித்தார்.

களுத்துறை பாடசாலையில் கல்வி கற்ற சோமவங்ச, 1969 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியில் இணைந்து கொண்டார். இதனையடுத்து 1984 ஆம் ஆண்டு கட்சியின் அரசியல் சபை உறுப்பினராக பதவி வகித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் 14 அரசியல் சபை உறுப்பினர்களில் சோமவங்ச அமரசிங்க மாத்திரமே உயிருடன் பிழைத்தார். ஏனையோர் 87 ஆம் 89 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கிளர்ச்சியின் போது கொல்லப்பட்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்ட பின்னர், இலங்கையில் தப்பிச் சென்ற அவர் நீண்டகாலமாக வெளிநாட்டில் வாழ்ந்து வந்தார்.

# அமெரிக்காவில் நடைபெற்ற மோசமான கொலைகள்

(வொஷிங்டன்)

அமெரிக்க இரவுவிடுதியில் கடந்தவாரம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 50றகு அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். அமெரிக்காவில் அவ்வப்போது இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அவை பற்றிய சிறு தொகுப்பு:

1. 2016ம் ஆண்டு: ஓரின சேர்க்கையினர் பங்கு பற்றிய கிளப்பில் ஒமர் மாட்டீன துப்பாக்கி பிரயோகம் நடத்தி இது நடைபெற்றது. ஆகக் குறைந்தது 50 பேர் கொல்லப் பட்டார்கள் .
2. 2007ம் ஆண்டு : செயுன் குயிசோ வேயினியா தொழில்நுட்ப பல்கலை கழகத்தில் மாணவர்களை சுட்டுக் கொண்டு, தானும் தன்னையே சுட்டு இறந்தான். 32 பேர் கொல்லப் பட்டார்கள்
3. 2012 ஆம் ஆண்டு : அடம் லான் சா 6,7 வயது வந்த பிள்ளைகளை சான்டி கூக் என்ற இடத்தில் கெனட்றிக்கட் மாநிலத்தில் துப்பாக்கி பிரயோகம் செய்து தானும் தன்னையே சுட்டு தற்கொலை செய்து இறந்தான். 27 பேர் கொல்லப்பட்டார்கள்.
4. 1991 ஆம் ஆண்டு : ஜோச் ஹெனாத் கிளினல் என்ற இடத்தில் இருந்த ஒரு போசன சாலைக்குள் வாகனத்தில் ஓடி சென்று அங்கு இருந்தவர்களை சுட்டு தன்னையே சுட்டு தற்கொலை செய்தான். 23 பேர் கொல்லப் பட்டார்கள்
5. 2015 ஆம் ஆண்டு : சையீர் றிஸ்வான் பாருக்கும் மற்றும் ரைவீன் மாலிக்கும் சான் பேனாடினோவில் குழுமியிருந்த உத்தியோகத்தவர்களை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்து கொலை செய்தான். 14 பேர் கொல்லப் பட்டார்கள்.
6. 2009 ஆம் ஆண்டு : மேஜர் நினால் மாலிக் கஷன் ரெக்காசில் உள்ள போட்கூட் ராணுவ முகாமில் துப்பாக்கி பிரயோகம் செய்து கொலை செய்தான். 13 பேர் கொல்லப்பட்டார்கள்.
7. 2009 ஆம் ஆண்டு: ஜிவலி வொம் நியூயோக்கில் உள்ள புலம் பெயர்ந்தோர் மத்திய நிலையத்தில் வைத்து அங்கு இருந்த வர்களை கொலை செய்து தானும் தன்னை தானே சுட்டு இறந்தார். 13 பேர் கொல்லப்பட்டார்கள்.
8. 1999 ஆம் ஆண்டு : எரிக் ஹரிசும் டிலான் கீபோல்டும் கொளரோடா மாநிலத்தில் உள்ள லிற்றில் ரன்னில் அமைந்துள்ள கொலம் பையின் உயர் கல்வி பாடசாலையில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து கொலை செய்தான். 13 பேர் கொல்லப்பட்டார்கள்.

# ஐரோப்பிய யூனியனுக்கு மீன் ஏற்றுமதி தடை நீக்கம்

(கொழும்பு)

இலங்கையில் பிடிக்கப்படும் மீன்களை ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதி செய்யும் தடை நீக்கப்பட்டுள்ளது.

சென்ற 2014ம் ஆண்டு ஒகஸ்ட் 14ம் திகதி இந்த மீன் ஏற்றுமதித் தடையை ஐரோப்பிய யூனியன் விதித்தது. தற்காலிகமாக இந்தத் தடையை மூன்று மாதம் விதித்தது. பின் ஜனவரி 2015 நிரந்தர தடை விதிக்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளின் மீன் இறக்குமதியில் 40 வீத மீன்கள் இலங்கையிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. ஸ்வோட் ஃபிஸ், சூரைமீன் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் முன்பு இலங்கை 2 ஆவது இடத்தில் இருந்தது.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி:- ரவிகருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத் தின் போது தமிழ் கூட்டமைப்பு வாக்களிக்காமல் ஒதுங்கியது எதனை வெளிப்படுத்துகிறது?**

**ந. மயூரன், கொழும்பு 12.**

பதில்:- தமிழ் கூட்டமைப்பு கையாளும் அரசியல் தந்திரோபாயத்தைத்தான் வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது.

**கேள்வி:- போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் இல்லை என ஜனாதிபதி மைத்திரி அடித்துக் கூறிவிட்டாரே இனி என்ன செய்வது?**

**சு. மிதுலா, திருகோணமலை.**

பதில்:- அவர்கள் என்னதான் கூறினாலும் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட 30/1 பிரேரணையில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை அரசாங்கம் நிச்சயம் நிறைவேற்ற வேண்டும்.

**கேள்வி:- அமெரிக்காவில் துப்பாக்கி கலாசரம் எப்போது ஓயும்?**

**ஜே. மைக்கல், யாழ்ப்பாணம்.**

பதில்:-எப்பொழுது ஒரு நாட்டில் துப்பாக்கி ஒழிக்கப்படுகிறதோ, அப்போதுதான் ஓயும்.

**கேள்வி:- வடமாகாண அமைச்சரவை மாற்றம் பிசுபிசுத்து விட்டதே?**

**சு. வடிவேல், பருத்தித்துறை.**

பதில்:- வடமாகாண அமைச்சரவையை மாற்றும் தைரியம் முதலமைச்சர் விக்கேஸ்வரனுக்கு இல்லை என்பதுதான் உண்மை.

**கேள்வி:- இந்தியாவில் கடன் வாங்கிவிட்டு இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்துள்ள விஜய் மல்லையா இந்தியாவுக்கு நாடுகடத்தப்படுவாரா?**

**ம. ராஜசேகரன், பூவரசன்குளம்.**

பதில்:- விஜய்மல்லையாவை நாடுகடத்த பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்புக்கொள்ள மறுக்கிறது.

**கேள்வி:- கொஸ்கம ஆயுதக்களஞ்சிய வெடிப்பு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத் தலா?**

**கே. அச்சுதன், மல்லாகம்.**

பதில்:- கொஸ்கம ஆயுதக்களஞ்சிய வெடிப்பு இராணுவத்தின் அசமந்தப் போக்கையே காட்டுகிறது. கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்கள் அழிந்துள்ளன அவற்றை மீண்டும் கொள்வனவு செய்வதானால் மக்களின் வரிப்பணம் தான் விரயமாகும். ஆயுதக்களஞ்சிய வெடிப்பு தேசியப்பாதுகாப்புக்கு பாரிய சவால் தான்.

**கேள்வி:- இந்தியப்பிரதமர் மோடியை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சந் தித்துள்ளார். இனி என்ன நடக் கும்?**

**ப. நிமலினி, கண்டாவளை.**

பதில்:-பிரதமர் மோடியிடம் அம்மையார் 19 அம்சக் கோரிக்கையை முன் வைத்துள்ளார். அவற்றில் இரண்டு கோரிக்கைகள் இலங்கை சம்பந் தமானவை. இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்ட கச்சதீவை மீட்க வேண்டும். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வது. இந்த இரண்டும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் கோரிக்கைகள். எனவே ஜே. மோடி சந் திப்பு இலங்கையில் பெரிய பாதிப்பை ஏற் படுத்தும் என்பது உண்மையே.

**கேள்வி:- வட பகுதியில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றமுடியாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறதே?**

**டி. சிறிரங்கன், பூநகரி.**

பதில்:- வட பகுதியில் இராணுவ முகாம்கள் இருப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. தனியார் காணிகளில் இராணுவம் இருப்பதுதான் பிரச்சினை. அரச காணிகளில் இராணுவம் இருந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி, சுன்னாகம்.*

# நிர்வாணமாக அமர்ந்து சாப்பிடும் ஹோட்டல் திறக்கப்பட்டது

மிக புதுமையான ஹோட்டல் ஒன்று இங்கிலாந்து தலைநகர் லண்டனில் திறக்கப்பட உள்ளது. செயற்கையாக தயாரிக்கப்படாமல் முற்றிலும் இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் பரிமாறப்பட உள்ளன. தயாரித்து வழங்கப்படும் உணவு வகைகளில் தூய்மை கேடுகள் எதுவும் இருக்காது. அதில் ரசாயன பொருட்கள், செயற்கை தனமான வண்ணங்கள் கலக்கப்பட மாட்டாது.

உணவு சாப்பிடும் இடத்தில் மின்சார வசதி, செல்போன் மற்றும் டெலிபோன் உள்ளிட்ட தகவல் தொடர்பு சாதனங்களோ கிடையாது.


இவை அனைத்தையும் விட உணவு சாப்பிட வரும் வாடிக்கையாளர்கள் உடைகள் எதுவும் அணியாமல் நிர்வாணமாக அமர்ந்து பொழுதை கழிக்கலாம். அல்லது பாதி உடை அணிந்து அரை நிர்வாணமாகவும் உணவு அருந்தலாம். இங்கு ஒயின் மட்டுமே சப்ளை செய்யப்படும். விஸ்கி, பிராந்தி உள்ளிட்ட மற்ற மதுபான வகைகள் சப்ளை செய்யப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முழு நிர்வாணமாக உணவு சாப்பிடுபவர்களுக்கு 'பர்த்டே' அறை ஒதுக்கப்படும். இந்த ஹோட்டலுக்கு இந்தியில் 'புனிபாதி' என பெயரிட்டுள்ளனர். இதற்கு தமிழில் 'அடிப்படை' என அர்த்தமாகும். இந்த புதுமையான ஓட்டலை லண்டனை சேர்ந்த செப்லியாலி என்பவர் தொடங்கியுள்ளார். சாப்பிட வரும் பொது மக்கள் எந்தவித கவலையுமின்றி மகிழ்ச்சியாக இரவு பொழுதை கழிக்க வேண்டும் என்பதற்காக இந்த ஹோட்டலை பார்த்து பார்த்து பிரத்யேகமாக வடிவமைத்துள்ளோம். இங்கு மூங்கிலால் அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

சைவப்பிரியர்கள்மற்றும் அசைவ பிரியர் களுக்கு என்று தனித்தனியாக உணவு வழங்கப்படுகிறது. இங்கு 42 இருக்கைகளே அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஹோட்டல் தொடங்குவதற்கு முன்பே இதற்கு 'கிராக்கி' அதிகரித்துள்ளது. 3700 பேர் 'புக்' செய்து 'வெயிட்டிங் லிஸ்ட்' டில் அதாவது காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.



# 555 நாட்கள் இதயம் இல்லாமல் வாழ்ந்த வாலிபர்



நம் உடலில் கை, கால், மூளை, நுரையீரல் முதலான அனைத்து உறுப்புகளுக்குமே ஒரே சீராக ரத்தத்தை உந்தித்தள்ளி, நம்மை இயக்கி வரும் இயந்திரமே இதயம்தான். இதயம் இல்லாமல் நம்மால் சில நொடிகள், ஏன் ஒரு நொடிகூட இயங்க முடியாது. ஆனால், Stan Larkin அப்படி இல்லை. மிச்சிகனைச் (Michigan) சேர்ந்த லார்கினுக்கு 16 வயது இருக்கும் போது, அவருக்கு ARVD (arrhythmogenic right ventricular dysplasia) என்னும் இதய நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இவரது இதயத்துடிப்பு ஒழுங்கற்றதாக இருந்தது. இது மிகவும் ஆபத்தானது என்ற காரணத்தினால், இவரது உடலில் இதயத்துடிப்பைச் சீராக்க ஒரு அதிர்வு கருவி பொருத்தப்பட்டது. இதனால் இவர் அதிகமான வேலைகளைச் செய்ய முடியாமல் போனது.

இத்துடன் விதி, தன் விளையாட்டை நிறுத்தவில்லை. ஏப்ரல் 2012 ல், லார்கினின் இதயம் சுத்தமாக செயலிழந்தது. ஏற்கெனவே இதய மாற்று அறுவை சிகிச்சைக்காக, பொருத்தமான இதயத்திற்காகக் காத்திருந்த நூற்றுக்கணக்கானவரோடு, இவரும் காத்திருந்தார். USA வில் இதயத்திற்காக காத்திருந்தவர்களில் சராசரியாக ஒரு நாளைக்கு 22 பேர் மரணத்தைத் தழுவினார்கள்.

இவரது உடல் செயலிழந்து கொண்டு வருவதை உணர்ந்த மருத்துவர்கள், நவம்பர் 2014 ல் இவரது இதயத்தை அகற்றிவிட்டு 'Big Blue' என்ற இயந்திரத்தைப் பொருத்தினார்கள். இந்த இயந்திரம் இவர் ரத்தத்தை சீராக உந்தித்தள்ளி, உயிர்வாழச் செய்தது. ஆனால் படுத்த படுக்கையாக இருந்தார். பிறகு, Freedom portable என்னும் இயந்திரத்தைப் பொருத்தினார்கள். இதை ஒரு பேக்கினுள் வைத்து விடலாம். அவ்வளவு சிறியது. இதுகுறித்து லார்கின் கூறுகையில், "இது நிஜ இதயத்தைப் போன்றதுதான். என்ன நம் உடலினுள் சில குழாய்கள் சென்று வரும். மற்றபடி நிஜ இதயத்தைப் போலத்தான் இருக்கும். பள்ளிக்குச் செல்லும் போது அணியும் பேக் போலத்தான் அணிந்து இருந்தேன."லார்கின் 24x7 அந்த பையை அணிந்து இருந்தார். இவரது தினசரி வாழ்க்கையில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இதை அணிந்து கொண்டே கூடைப்பந்து விளையாட்டையும் விளையாடியுள்ளார். பிறகு, மே 2016 ல் 555 நாட்களுக்குப் பிறகு இவருக்கு இதயம் பொருத்தப்பட்டது.

இவரது தம்பி Domonique க்கும் இதே நோய் ஏற்பட்டுள்ளது. இது ஒரு பரம்பரை நோய். Domonique வின் மூன்றில் இரண்டு குழந்தைகளும் இந்நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டனர். ஆனால் லார்கினை போன்றே Domonique ம் இதயம் பொருத்தப்பட்டு வாழ்ந்து வருகிறார். "இது தங்களுக்கு ஒரு மறுவாழ்வு!" என இரு சகோதரர்களும் வியக்கின்றனர்

# சமூக விழிப்புணர்வுக் களம்

இந்த உலகத்தை ஆணாதிக்கம் கொண்ட உலகம் என்று சொல்கின்றார்கள். பெண்களுக்கு ஆண்கள் சரிசமமாக அந்தஸ்து கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். எப்போதும் பெண்கள் அடுக்களைப் பூச்சிகள் தான் என்று கூறப்படுகிறது. பெண்கள் பிள்ளைகள் பெறும் இயந்திரங்கள்தான் என்று ஆண்கள் கருதுகின்றனராம் ஆனால் ஆணுக்கு பெண் எந்த விதத்திலும் சளைத்தவரல்ல.

18 வயது பராயம் அடைந்த இருபாலாருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அரச சேவைகளில் பணியாற்றும் இருவருக்குமே ஒரே சம்பளத்திட்டம் தான் அமைந்துள்ளது. அங்கு ஆணுக்கு ஓர் சம்பளம் பெண்ணுக்கு ஓர் சம்பளம் என்று கொடுப்பதில்லை.

இருந்த போதும் பெண்ணைப் பெற்றவர்கள் திருமணத்தின் போது சீதனம் என்ற பேரில் பணத்தை அள்ளிக் கொட்ட வேண்டியுள்ளது. இது சம்பந்தாக பெண்களையும் ஆண்களையும் தினச்செய்தி பேட்டி கண்டது. விபரம் கீழே:





## பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்களா?

இன்று மட்டுமல்ல என்றுமே பெண்கள் தொழில் ரீதியாக சளைத்தவர்கள் அல்ல. ஆனால் அன்று போல் அல்லாமல் எந்நேரமும் எங்கும் சென்று வரக் கூடியதாக இருக்கு. உதாரணமாக, எனது அம்மா நாங்கள் பெண் பிள் ளையாக இருந்தாலும் ஒரு ஆண் பிள்ளையாகத்தான் வளர்த்தார். எங்களுக்கு உலக அனுபவங்களையும் தைரியத்தையும் ஊட்டி வளர்த்தார். நான் தையல் நிலையத்தில் தையல் கற்கும் மாணவி. எங்களுடைய ஆசிரியர் ஓர் ஆணாக இருந்தும் பெண்கள் சளைத்தவர்கள் இல்லை என்பதை அவர் புரிந்து கொண்டு எங்களுக்கு எல்லா விதமான மதிப்பும் தந்து எங்களுக்கு பணி புரிய உதவுகின்றார். இங்கு பணிபுரிபவர்கள் அனைவரும் பெண்கள் தான்.

ஜே. தாரணி.
தெல்லிப்பளை.



மனநம்பிக்கைஅதிகம்கொண்டவர்கள் பெண்கள்.

எவற்றையும் எதிர்கொள்ளும் திறன், சேமிப்பிலும் பெண்கள் தான் முதலிடம்.

ஆனால் எங்களிடம் இருக்கும் பல வீனமே எதையும் என்று இல்லாமல் குறிப்பாக காதல் விடயத்தில் முழுமையாக ஆண்களை நம்பி விடுகிறோம். ஆனால் எங்கள் கனவுகளை கலைப்பவர்கள் கண்ணீர் விட நேரிடும்.

ஆண்கள் வேலை இல்லாமல் இருந்தாலும் பெண்கள் அவர்களை ஆதரித்து குடும்பத்தை நடத்திச் செல்கிறார்கள். ஒரு குடும்பத்தின் அச்சாணியே பெண் தான்.

இ. துர்க்கா
மல்லாகம்.



பெண்கள் பிறரை நம்பிவாழவேண்டிய அவசியம் இல்லை. (பெண்கள் ஏன் ஆண்களின் ஊதியத்தை நம்ப வேண்டும்?)

ஆனால் பெண்களாகிய நாங்கள் ஆண்களுக்கு எதிராக எந்த வேலையும் செய்யத் தயார். இந்த சமுகத்தில் தொழில் ரீதியாக ஏளனப் பார்வை இருக்கின்றது. அவற்றையும் கடந்து சுயகெளரவத்துடன் வாழ்ந்து வருகின்றோம். குறிப்பாக பெண்களுக்கான தொழிலாக வர்ணிக்கப்படும் இந்தத் தையல் தொழிலையும் தாண்டி என் குடும்பத்திற்காக வாகனம் ஓடவும் தயாராக இருக்கின்றேன்.

கு. சரண்யா.
தெல்லிப்பளை.



ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல.

ஆரம்பத்தில் தையற் பயிற்சி நிலையத்திற்கு என்னைச் செல்ல வேண்டாம் ஆண்களினால் பிரச்சினை ஏற்பட்டு எமது குடும்பத்திற்கும் தொல்லை தரவேண்டாம் என்று கூறியும் பின்பு என் மேல் இருக்கும் நம்பிக்கை தொடர வைத்தது. இன்றும் அந்த நம்பிக்கை தொடர்கிறது.

செ. நபீனா.
மல்லாகம்.



அன்று பெண்கள் முடங்கியிருந்தார்கள். முடக்கவும் பட்டார்கள். யாரும் எந்த விடயத்திலும் சளைத்தவர்களல்ல. என் வீட்டிலும் ஆண் மகன்கள் இருக்கின்றார்கள். இருந்த போதிலும் பெண்களாகிய நாங்கள் அவர்களுக்கு சளைத்தவர்களல்ல.

இரு கைகள், இரு மனங்கள் சேர்ந்தால் எமது பயணப் பாதை வெற்றி தான்.

பெண்கள் ஆடம்பரத்தை அதிகம் விரும்பினாலும் கலாச்சாரத்திற்கு ஏற்றவாறு மாற்றத்தை விரும்புகின்றோம். எமக்கு இன்று அழகு நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் ஆனால் கலாச்சார ரீதியில் எமது எண்ணங்களை வழிநடத்த விரும்புகின்றோம்.

இன்று தமிழ் கலாச்சாரத்திற்கு வலுச் சேர்ப்பதே பெண்கள் தான்.

து. கோபிதா.
வசாவிளான்



எனது வெற்றிக்கு ஓர் ஆண் காரணம் என்றால் இதில் யார் சளைத்தவர்கள்? (அவரே நம்மிடம் கேள்வி கேட்கின்றார்.)

எஸ். தர்மிகா.
தெல்லிப்பளை.



நான் அன்னை தெரேசாவை முன்னுதாரணமாகக் கொள்கிறேன். ஒரு சில விடயங்களையாவது கடைப்பிடிக்கப் பழகவேண்டும். ஆண்களுக்கு எதிரானவர்கள் அல்ல பெண்கள். சிறந்த ஆண் மகனை எனக்குப் பிடிக்கும். ஆனால் யாரை பெண்களுக்குப் பிடிக்காது என்று அடுக்கிக் கொண்டே செல்கின்றார்.

ஆண்களை விட பெண்கள் சளைத்தவர்களல்ல. பெண்கள் குடும்பப் பொறுப்பு உள்ளவர்கள். பொறுமை, கலாசாரம் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

பெண்கள் ஆண்களை விட அரச பதவிகளில் அதிகம் செல்வாக்கு செலுத்துகிறார்கள்.

பெண்கள் விண்வெளிக்குச் செல்கிறார்கள். ஆண்களை விட விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குகிறார்கள். நோபல் பரிசினைப் பெற்றுக் கொள்கிறார்கள். பல்கலைக்கழக அனுமதியினை ஆண்களை விட பெண்கள் அதிகம் பெற்றுக் கொள்கிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற பெண்கள் தொழில் முயற்சியாளராக உருவாகி ஆண்களை விட அதிகளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

பல பெண்கள் உள்ளூர் நிறுவனங்களில் தலைமைத்துவம் வகிக்கிறார்கள்.

ஏ. யுவனா. கட்டுவன்
(மல்லாகம், மோர்னிங் ஸ்ரார் தையல் நிலைய பொறுப்பாளர்)




## ஓர் அலசல்


ஆண், பெண் இருவருக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளன அது பால் ரீதியாக கலாச்சார ரீதியாக இருக்கலாம். தொழில் ரீதியாக மட்டும் நோக்கக் கூடாது. ஆண் ஆணாகவும் பெண் பெண்ணாகவும் வாழ்ந்தாலே சளைப்புமில்லை களைப்பும் இல்லை. (வாய் மூடி வெட்கத்துடன் சிரிக்கின்றார்.)

விஸ்வலிங்கம் ரதீபா.
வசாவிளான்





பல லட்சம் போலி வாக்காளர்கள் நிறைந்த வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் தேர்தல்கள் ஜனநாயகச் செயல் முறைகளையே கேலிக் கூத்தாக்கி விடாதா? மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம். கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது? என்று திமுக தலைவர் கருணா நிதி கேள்வி எழுப்பியுள்ளார்.




# சொன்னார்கள் சொன்னார்கள்

இலங்கையில் இனி ஒரு போதும் யுத்தம் ஏற்படப் போவதில்லை என தான் நம்புவதாக யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹேஸ் சேனாரத்ன தெரிவித்துள்ளார். யுத் தம் நிறைவடைந்தும் இராணுவத்தினர் வடக் கில் நிலைத்திருப்பது பொது மக்களின் நன்மைக்காக என்றும் அவர்களின் நன் மைக்காக இராணுவம் முழு மூச்சுடன் செயற்படு வதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.






'சிறுவர்கள் தொடர்பில் செய்தி வெளியிடும்போது ஊடகங்கள் தம்மைப் பற்றி மட்டுமே சிந்தித்துச் செயற்படுவதுடன் அது தொடர்புடைய சிறுவர் களது எதிர்காலம் குறித்துச் சிந்திப்பதில்லை" என ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரி வித்துள்ளார்.



தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் நிறுத் தப்பட்டுள்ள சிங்களப் படையினரைத் திரும்பப் பெற முடியாது என்று இலங்கை அரசு திட்ட வட்டமாக அறிவித்திருக்கிறது. இதனை யடுத்து இந்தியாவின் நிலை என்ன என்று பாமக நிறு வனர் ராமதாஸ் கேட் டுள்ளார்.




'நாட்டில், கடந்த ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதியன்று ஏற்பட்ட மாற் றத்துக்கான கொள்கையுட னேயே இன்னும் நானிருக்கிறேன்' என்று தெரிவித்த சுகா தார அமைச் சரும் அமைச்சர வைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன, 'ஜனவரி 8 ஆம் திகதிக்கான குறிக்கோள் தவறுமாயின், நல்லாட்சி கவிழ்ந்து விடும்" என்றும் கூறினார்.



வட கடலில் மீன் பிடிப் பதற்கென தென்பகுதி மீன வர்களுக்கு அனுமதிப் பத்திரம் விநியோகிப்ப தனை உடனடியாக நிறுத்துமாறு மீன்பிடி மற்றும்நீரியல்வள அமைச் சர் மஹிந்த அமர வீர அதிகாரிகளுக்கு பணிப் புரை விடுத்துள்ளார்

முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களை பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்கிறார்கள். சிங்களத் தலைவர்கள் சிங்களவர்களுக்கு வேலை தேடித்தருகிறார்கள் மற்றும் அதிகாரத்திலுள்ள ஒரு சில தமிழர்கள் சில தமிழர்களை ஆட்சேர்ப்பு செய்கிறார்கள். ஆனால் தகுதியும் திறமையுள்ளதமிழர்கள் அரசாங்க சேவையில் வேலைகளை பெற இயலாத நிலையிலுள்ளார்கள் என சம்பந்தன் தெரிவித்தார்.





"தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கச்சதீவை, இன்று நேற்றல்ல, அத்தீவை கேட்டுக் கொண்டுதான் இருகின்றார். அதுமுடிந் து போன விடயமாகும். அதனை யாரும் கேட்கமுடியாது. நாங்கள் கொடுக்கவும் மாட்டோம்" என்று ஊடகத்துறை பிரதியமைச்சர் கருணாரத்ன பரண வித்தாரன தெரிவித்தார்.

# மகனை காப்பாற்ற உயிர் தியாகம் செய்த தாய்..!

அமெரிக்காவின் இரவு விடுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டின் போது தனது மகனை காப்பதற்காக துப்பாக்கி முன் பாய்ந்து தாய் உயிரை விட்டுள்ளார். இந்த நெஞ்சை உருக்கும் தியாகம் தற் போது தெரியவந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவில் ஆர்லாண்டோவில் உள்ள "பல்ஸ்" ஓரின சேர்க்கையாளர் விடுதியில் துப்பாக்கியுடன் நுழைந்த உமர் மாட்டீன் என்பவர் சர மாரியாக நிகழ்த்திய துப்பாக்கிச்சூட்டில் 50 பேர் உயிரிழந்தனர். 50 க்கும் மேற் பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்ற னர்.


நியூயார்க்கை சேர்ந்த பிரெண்டா லீ மார்க்யூஸ் மெக்கூலுக்கு 11 குழந் தைகள். 49 வயதான மெக்கூல், தனது பிள்ளைகளுடன் வசிப்பதற்காக நியூ யோர்க்கில் இருந்து ஆர் லாண்டோவுக்கு குடிபெயர்ந்துள்ளார். புற்றுநோயால் பாதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்த மெக்கூல், புகழ்பெற்ற சல்சா நடனமாடு வதற்காக இரவு விடுதிகளுக்கு செல்வதை வாடிக்கையாக கொண்டுள்ளார்.

மெக்கூலின் இளைய மகன் இசைஹா ஓரின சேர்க்கையாளர் என கூறப்படுகிறது. துப்பாக்கிச்சூடு நடை பெற்ற கடந்த 12 ஆம் தேதி அன்று தனது 21வயது மகன் இசைஹா ஹெண்டர்சனுடன் நடனமாட 'பல்ஸ்' ஓரின சேர்க்கையாளர் இரவு விடுதிக்கு சென்றுள்ளார். விடுதியில் துப்பாக்கி யுடன் நுழைந்த உமர் மாட்டீன், சரமாரியாக இசைஹாவை நோக் கி குறிவைத்து உமர் மாட்டீன் சுட முயற்சி செய்த போது, அவ ருக்கு முன்பாக பாய் ந்த மெக்கூல், "கீழே படு" (Get down) எனக் கூறி மகனை காப் பாற்றியதுடன், உமர் மாட்டீனின் துப் பாக்கி குண்டுக்கு பலியானார். "புற்று நோய்க்கு தான் எப் போது வேண்டுமானாலும் உயிரிழக்கலாம் என்பதால், நான் உயிரிழந்தால் நீங்கள் அதற்காக வருத்தப்படக்கூடாது. முடிந்தால் அதனையும் கொண்டாடுங்கள்" என்றே மெக்கூல் கூறி வந்ததாக அவரது மகன்கள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.



துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். அப்போது, விடுதியில் இருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடியுள்ளனர். மெக்கூலின் மகன்

# ராஜீவ் காந்தி வருகையும் பண்டிதரின் இறப்பும்



ஒரு காலத்தில் அரசியலில் முக்கிய பங்களிப்பு செய்த ராஜீவ் காந்தி, இந்திரா காந்தியின் முதல் புதல்வர் ஆரம்பகாலத்தில் ராஜீவ் காந்தி அரசியலில் அதிக கவனம் செலுத்தவில்லை.

20ஆகஸ்ட் 1944ம் ஆண்டு இந்திரா காந்திக்கும் பெரோஸ் காந்திக்கும் மகனாக பிறந்தார். அவருடைய தம்பியார் சஞ்சய் காந்தி இவரிலும் பார்க்க 2 வயது குறைந்தவர். 1961 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி லண்டனில் உயர்தர பரீட்சை படிப்பை படித்தார் அதை அடுத்து 1962 ஆம் ஆண்டு அவருக்கு கேம்பிரிஜ் பல் கலைக் கழகத்தில் பொறியியல் படிப்பிற்கு அனுமதி கிடைத்தது.

1965 ஆம் ஆண்டு வரை படித்தார், ஆனால் அவர் பட்டம் பெறவில்லை. பின்னர் இந்தியா திரும்பிய பின் இந்தியாவில் உள்ள பறக்கும் கிளப்பில் உறுப்பினரானார். அங்கே அவர் விமான ஓட்டியாக பயிற்சி பெற்றார்.

1970 ஆம் ஆண்டு எயர் இந்தியாவில் ஒரு விமானியாக சேர்ந்து கொண்டார். அந்த காலத்தில் அரசியலில் எந்தவிதமான ஆர்வமும் காட்டவில்லை. மூன்று வருட காலம் காதலுக்கு பின்னர் இத்தாலியைச் சேர்ந்த என்விகே அன்ரோனியா அல்பிடோ மெய்னோவை திருமணம் முடித்தார்.

அவ்வாறு திருமணம் செய்து கொண்ட அவர் தனது பெயரை பின்னர் சோனியா காந்தி என மாற்றிக்கொண்டார். இந்த தம்பதிகளுக்கு இரு பிள்ளைகள் பிறந்தனர். 1970 ஆம் ஆண்டில் ராகுல் காந்தியும் 1972 ஆம் ஆண்டு பிரியங்கா காந்தியும் பிறந்தார்கள்.

அரசியலில் நிறைய ஆர்வம் கொண்டிருந்த சஞ்சய் காந்தி 23 ஆம் திகதி யூன் மாதம் 1980 ஆம் ஆண்டு விமானம் பறக்கும் பயிற்கியின் பொழுது விபத்தில் மாட்டிக்கொண்டு உயிரிழந்தார். அந்த சமயம் ராஜீவ் காந்தி லண்டன் சென்றிருந்தார். சஞ்சயின் மறைவை அடுத்து லண்டனில் இருந்த ராஜீவ் காந்தி விரைந்து வந்தார். அவர் டெல்லி வந்த மறுநாள் சஞ்சய் காந்தியின் உடல் தகனம் செய்யப்பட்டது.

அதை அடுத்து அந்த இறப்பு நிகழ்வுகள், கருமங்கள் எல்லாம் முடிந்த பின்னா சங்கராச்சாரியார் சுவாமி ஸ்ரீ சிவரூபநாத் பண்டரிநாத்தில் இருந்து ராஜீவ் காந்தியின் பரம்பரை வீட்டிற்கு வந்து சஞ்சயின் மறைவிற்கு தனது அனுதாபத்தை தெரிவித்தார். அப்பொழுது ராஜீவ் காந்தியை பார்த்து இனிமேல் விமானம் எல்லாம் பறக்க வேண்டாம். நாட்டின் சேவைக்காக அர்ப்பணி என சங்கராச்சாரியார் சுவா மிகள்ஆலோசனை வழங்கினார். அதே நேரம் காங்கிரஸ் கட்சியின் 70 உறுப்பினர்கள் ஒப்பமிட்டு ஓர் மகஜர் தயாரித்து அதில் ராஜீவ் காந்தியை அரசியலில் ஈடுபட வைக்குமாறு இந் திரா காந்தியிடம் கேட்டுக் கொண்டார்கள்.

மகஜரை பெற்றுக் கொண்ட இந்திரா காந்தி அரசியலில் குதிப்பதும்,குதிக்காமல் இருப்பதும் ரஜீவ் காந்தியின் முடிவே. நான் இதில் தலையிட முடியாது என்று கூறிவிட்டார். அதை அடுத்து பத்திரிகையாளர்கள் ராஜீவ் காந்தியிடம் இனி நீங்கள் அரசியலில் குதிப்பீரா என்று கேட்டார்கள் அதற்கு அவர் "நான் அரசியலில் குதிப்பதால் எனது தாயாருக்கு அது உதவியாக இருக்கும் என்டால் நான் அரசியலில் குதிக்க தயார்" என்று கூறினார்.அமேதி தொகுதி உறுப்பினரான சஞ்சய் காந்தி இறந்ததை அடுத்து ஒரு வருடத்திற்கு பின்னா நடைபெற் உபதேர்தலில் ராஜீவ்காந்தி போட்டியிட முடி வெடுத்து வெற்றியும் பெற்றார்.

ராஜீவ் காந்தி பொதுசெயலாளராக நியமிக்கப்பட்டார்.அது மாத்திரமல்லாது பல அமைப்பு வேலை பொறுப்புகளும் அவருக்கு வழங்கப்பட்டது. முக்கியமான பொறுப்பாக 1982 ஆம் ஆண்டு ஆசிய விளை யாட்டின் அமைப்பு பொறுப்பு அவரிடம் விடப்பட்டன. 1981ம் ஆண்டு ஆகஸ் மாதம் 31 ஆம் திகதி காலையில், பிரதமர் இந்திராகாந்தி மெய்காப்பாளர் இருவரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். அவ்வாறு பிரதமர் கொலை செய்யப்பட்டதை அடுத்து அன்று மாலையே நாட்டின் பிரதமராக ராஜீவ் காந்தி தெரிவு செய்யப்பட்டார்.

இவ் வாறு பிரதமராக தெரிவு செய்யப்பட்ட ராஜீவ்காந்தி படிப்படியாக இலங்கை தமிழரின் பிரச்சினைகளில் ஈடுபடதொடங்கினார். அவர் ஸ்ரீலங்கா பாதுகாப்பு படையினரின் நீதி நியாயமற்ற கொலைகளை கண்டித்தார்.

இலங்கை ராணுவத்துடன் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஆறு போராளிகள் கொல் லப்பட்டார்கள். இந்த கொலையை யாழ்ப் பாண பிரஜைகள் குழு வன்மையாக கண்டித்தது. "நாங்கள் உண்மையில் வீட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளோம்," என யாழ்ப்பாண பிரைஜைகள் குழுவின் தலைவர் ஆர்.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

"இவ்வாறான சாமானிய மக்கள் கொலை செய்யப்படும் போது எங்களால் பார்த் துக் கொண்டிருக்க முடியாது," என்று தமிழர் ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார். இந்த காலத்தில் கொலைகள் போட்டா போட்டி போட்டுக்கொண்டு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி 1984 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் உள்ள வீதியில் வைக்கப்பட்டிருந்த ஒரு கண்ணி வெடி மீது பொலிஸ் வாகனம் ஒன்று ஏறியதை அடுத்து எட்டு பொலிஸாரும் அந்த ஜீப் வண்டியின் சாரதியும் கொல்லப்பட்டார்கள்.

மறுநாள் ராணுவத்தின் வாகனம் ஒன்று குண்டுவெடிப்பில் பதவியாவில் வெடித்து சிதறிய பொழுது 2 ராணுவத்தினர் இறந்தார்கள். அன்றே யாழ்ப்பாணத்தில் 1000 இளைஞர்கள் ராணுவத்தினரால் சுத்திவளைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டார்கள். போராளிகளின் போராட்டம் தொடர்ந்து எழுச்சி பெற்றுக்கொண்டே இருந்த பொழுது அரசாங்கம் செய்வதறியாது திகைத்தது.

நவம்பர் மாதம் கடைசியில் இருந்து ஒரு மாத காலத்தில் 400 மேற்பட்ட கொலை நடந்ததாக கணக்கிடப்பட்டது. அதை அடுத்து, தமிழ் போராளிகளுக்கு எதிராக குண்டுகள், செல்கள், றொக்கட்லோஞ்சர் ஆகியன பாவிப்பது என்று அரசாங்கம் முதல் முதலாக முடிவு செய்தது.

1984ம் ஆண்டு இறுதியில் போராளிகளுக்கு எதிராக சில நூற்றுக்கணக்கான ராணுவம் முழுமூச்சாக போராட்டத்தில் ஈடுபட்டது ஆனால் போராளிகள் தப்பித்து விட்டு பாக்கு நீரிணையைக் கடந்து தமிழ் நாட்டிற்குள் போய் நுழைந்து விடுகிறார்கள்.

1985 ஆம் ஆண்டு ரெலோவினரின் வெற்றிகரமான ஒரு போராட்ட நடவடிக்கையுடனும் பிரபாகரனின் நெருங்கிய சகாவின் கொலையுடனும் ஆரம்பமாகியது.

அதே நேரத்தில் ஜனாதிபதி ஜெ.ஆர் ஜெயவர்தனாவின் மகன் ரவி ஜெயவர்தனா சில நூற்றுக்கணக்கான ராணுவ வீரர் களை தெரிவு செய்து, அவர்களுக்கு விசேட பயிற்சியளித்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் அவர்களை நிலைகொள்ள வைத்தார். அதே நேரம் தமிழ் நாட்டில் இலங்கை ராணுவத்தின் அட்டூழியங்களுக்கு எதிர்ப்பு வளர்ந்து கொண்டே வந்தது.



ஜனவரி 9ம் திகதி அச்சுவேலியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்று ராணு வத்தினரால் தீடீர் என்று சுற்றிவளைத்து தாக்கப்பட்டது. அந்த தாக்குதலில் 14 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்டவர்களுள் முக்கியமானவர் அந்த முகாமிற்கு பொறுப் பாளராக இருந்த பண்டிதர் ஆவார். தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆரம்பகால போராளிகளில் ஒருவர், பிரபாகரனின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்.

ஆந்த முகாமிற்கு எதிராக நடந்த போராட்டத்தில் ராணுவம் வெற்றி கொண்டது. அந்த முகாமில் இருந்த நிறைய ஆயுதங்கள், குறிப்பாக இயந்திர துப்பாக்கிகள் மற்றும் பல வகையான துப்பாக்கிகளை ராணுவத்தினர்கள் எடுத்துக் கொண்டார்கள். இதுவே இலங்கை ராணுவம்தமிழீழ விடுதலைப் புலிகளிடம் நடத்திய போராட்டத்தில் மிகவும் குறிப்பிடதக்க வெற்றியான போராட்டம் ஆகும்.

அதை அடுத்து ரெலோவினர் 19 ஆம் திகதி ஜனவரி 1985 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற யாழ்தேவி ரயிலை, யாழ்ப்பாணத்தில் இருந்து 70 கிலோ மீற்றரில்அமைந்துள்ள முருகண்டியில் குண்டு வைத்து தகர்த்தார்கள்.

**அரசகேசரி**

இந்த போராட்டம் தமிழீழ விடுதலை அமைப்பின் இன்றைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த ரயில் தாக்குதலில் 34 பேர் இறந்தார்கள். அதில் 22 பேர் ராணுவத்தினர். இதுவே ராணுவம் போராளிகளிடம் இழந்த அதிகபடியான ராணுவவீரர்கள் ஆகும். அந்த குண்டு வெடிப்பு ரயின் வண்டியின் 11 பெட்டிகளை தகர்த்தன.

# உண்மை வெளிவருகிறது

## பகுதி - 17

**ஒபரேஸன் ரிவிரெஸ – சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கை**

யாழ்ப்பாணத்தில் இலங்கை ஆயுதப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு இராணுவ நடவடிக்கையே "ஒபரேஸன் ரிவிரெஸ". இது 1995 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் திகதி யாழ்ப்பாண நகரத்தையும் யாழ்ப்பாண குடாநாட்டின் ஒரு பகுதியையும் எல்.ரி.ரி.ஈ யிடம் இருந்து கைப்பற்றுவதைப் பிரதான இலக்காகக் கொண்டு ஆரம்பமானது. சமீபகால இலங்கை ஆயுதப்படையின் வரலாற்றில் மிகப் பெரிய,மற்றும் மிகவும் வெற்றிகரமான இராணுவ நடவடிக்கையாக ஒபரேஸன் ரிவிரெஸ நம்பப்படுகிறது.1995 ஆம் ஆண்டு நவமபர் மாதம் 29 ஆம் திகதி, யாழ் ப்பாணத்தை பாதுகாத்து வந்த எல்.ரி.ரி.ஈயின் நிலைகள் மீது பிரிகேடியர் ஜனக பெரேராவின் கட்டளையின் கீழ் 53ஆவது இராணுவ டிவிசனால் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

சிவிலியன் இழப்புகளை குறைக்கும் முகமாக ஒடுங்கிய ஓர் முனையில் இருந்து இராணுவ நடவடிக்கையை தொடங்குவது என்று பிரிகேடியர் ஜனக பெரேரா முடிவெடுத்தார். எல்.ரி.ரி.ஈயினால் கைப்பற்றியிருந்த பகுதிகளை கிழக்குப்புறமாக இருந்து கோணல் லக்கி ரணசிங்க தலைமையிலான 532 ஆவது இராணுவப் படையணி ஊடுருவித் தாக்கியது. நாவலர் வீதியிலுள்ள இறுக்கமான எல்.ரி.ரி.ஈ பாதுகாப்பு அரண்களைக் கைப்பற்றிய இராணுவப் படையணியை, வடக்குபகுதியில் இருந்து நல்லூர் பகுதி எல்.ரி.ரி.ஈ பாதுகாப்பு அரண்களை நோக்கி நகருமாறு கோணல் லக்கிரணசிங்க உத்தரவு பிறப்பித்து அதனைக் கைப்பற்றினார்.

இதனால் ஏற்பட்ட இடை வெளிப்பகுதியை பயன்படுத்தி, பிரிகேடியர் ஜனக பெரேரா கோணல் ஹிரான் ஹலாங்கொட தலைமையிலான ஆகாயமார்க்க படையணியின் தாக்குதலை தொடுத்து, யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றினார். அதேவேளை, கோணல் பேர்ஸி பொன்னான்டோவின் தலைமையிலான 534 ஆவது படையணி யாழ்ப்பாண இறங்குதுறையைக் கைப்பற்ற, கிழக்கு கரையோரமாக புறப்பட்டது. மூன்று படையணிகள், மூன்று திசைகளில் இருந்து ஒரேதடவையில் தாக்குதல்களைத் தொடுத்ததால், தனது பாதுகாப்பு அரண்களை பலனுள்ள வகையில் பாதுகாத்து ஒருங்கிணைக்க எல்.ரி.ரி.ஈ யினால் முடியாமல் போய்விட்டது.


1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் திகதி அந்தி நேரம், எல்.ரி.ரி.ஈயின் பாதுகாப்பு அரண்களை கைப்பற்றி, குழப்பநிலையை ஏற்படுத்தின. எல்.ரி.ரி.ஈ போராளிகள் அன்றிரவு தமது நகரப் பாதுகாப்பு அரண்களைக் கைவிட்டு, காரிருளில் படகுகள் மூலம் கிளாலி கடல் ஏரி ஊடாக தப்பிச்சென்றார்கள்.1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி காலை 53 ஆவது படைப்பிரிவுத் துருப்பினர் யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்து, 50 நாள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

எல்.ரி.ரி.ஈ யினர் ஓட்டம் பிடித்த வேளை, 50 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் சிவிலியன்களை சுண்டியிழுத்து வடக்கில் இருந்து வன்னிக்கு தம்முடன் கொண்டு சென்றார்கள்.

**முடிவுரை**

இறுதி முடிவில், செய்தி அறிக்கைகள், தனிப்பட்டரீதியில் எனக்குக் கிடைத்த தகவல்கள் மற்றும் 1980 ஆண்டு ஜூன் மாதத்திற்கும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கும் இடையில் நான் சேகரித்த அறிக்கைகளின் அடிப்படையாக கொண்டு நான் கணித்த மதிப்பீடு:-

இலங்கை சிவிலியன்கள் கொல்லப்பட்டதற்குப் பொறுப்பாக இருந்த எல்.ரி.ரி.ஈ பேர்வழிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தையும் இலங் கை ஜனாதிபதியையும் கோரு ம் எனது கோரிக்கையை பதிவிட நான் விரும்புகிறேன்.1991 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதம், கொலை, ஸ்தாபன வகைப்படுத்தப்பட்ட குற்றச்




செயல்கள், மற்றும் பயங்கரவாதச் சதி ஆகியன தொடர்பாக இன்டர்போல் மற்றும் ஏனைய பல அமைப்புகளினால் வேலுப்பிள்ளை பிரபாகரன் தேடப்பட்டு வந்தார். 1991 ஆம் ஆண்டு மே மாதத்திலும் 2002 ஆம் ஆண்டிலும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச்சதி தொடர்பாக அவருக்கு எதிராக இந்தியாவிலுள்ள சென்னை மேல் நீதிமன்றம் பிடியாணை ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது.

மத்திய வங்கிக் குண்டுவெடிப் புச் சம்பவம் தொடர்பாக, நீதிபதி அம்பேபிட்டிய பிரபாகரனைக் கைது செய்ய பகிரங்க பிடியாணை ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார். 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி, 51 குற்றச்சாட்டுகளில் பிரபாகரனைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி பிரபாகரனின் பிரசன்னம் இன்றி200 வருடகால சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருக்கிறார். இந்தக் குண்டுவெடிப்பில் நூற்றுக்கும் அதிகமான சிவிலியன்கள் மாண்டுபோனார்கள். அரசாங்க அறிக்கைகளின் படி, வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்து விட்டார் ஆயினும் அவரை ஒரு பயங்கரவாதியாக இலங்கை நீதிமன்றத்தில் மரணத்திற்குப் பின்னரான விசாரணை செய்யவேண்டும் என நான் வலியுறுத்துகிறேன். மனித சோகஇடர்கள், அழிவுகள் மற்றும் ஊனமாக்கல் ஆகியவற்றுக்கு அவரே பொறுப்பாளி என்பதால் அவரை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தவேண்டும்.

**நான் பின்வருவனவற்றையும் வலியுறுத்துகிறேன்**

1.அடேல் பாலசிங்கத்தை இலங் கைக்கு கொண்டுவரவேண்டும். அவருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

2.தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக இலங்கை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்ய வேண்டும்.

3.தமிழ் தேசியக் கூட்டமைப்பு 2004 ஆம் ஆண்டு எல்.ரி.ரி.ஈ யினால் அதன் பிரதிநிதியாக அமைக்கப்பட்டு, அந்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதால், அதனையும் அதன் உறுப்பினர்களையும் தடைசெய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தை வலியுறுத்தவேண்டும்.

4.மனிதகுலத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் குற்றவாளிக் கூட்டில் நிறுத்தப்பட்டு, இலங்கையின் உரிய நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும்.

5.எல்.ரி.ரி.ஈ யினால் பாதிக்கப்பட்ட சகலரையும் காணாமல்போனவர்கள் என்று அரசாங்கம் பகிரங்கமாக பிரகடனப்படுத்தி, மரணச்சான்றிதழ்களை வழங்கவேண்டும்.

6.எல்.ரி.ரி.ஈ அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாகத் தடைசெய்த சர்வதேச சமூகம் எல்.ரி.ரி.ஈ அமைப்பை விருத்திசெய்து, அதனை சர்வதேசரீதியாக மகிமைப்படுத்திய அதன் பதிலியான தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்ய முன்வரவேண்டும்.

7.அத்துடன் கொலைகள், அழிவுகள் மற்றும் ஊனமாக்கல் ஆகியனவற்றில் தனிப்பட்டமுறையில் சம்பந்தப்பட்ட டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் புளொட் ஆகிவற்றின் தலைவர்களை சர்வதேச சமூகம் தத்தமது நாடுகளில் வேண்டப்படாதவர்களாகக் கருத வேண் டும்.

8.முன்னாள் தீவிர எல்.ரி.ரி.ஈ ஆர்வலர்களை இலங்கைக்கு அழைத்து, அவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதையோ அல்லது அவர்கள் முக்கியத்துவம் பெற சந்தர்ப்பம் வழங்கப்படுவதையோ நான் எதிர்க் கிறேன்.

9.பயங்கரவாத அமைப்பில் ஏற்கனவே இணைந்து அதன் தலைவருக்கும் அந்த அமைப்புக்கும் விசுவாசப் பிர மாணம் செய்த எந்த ஒரு நபரும் பிரதான பொதுப்போக்கு அரசியலில் இணைவதாகவும் பயங்கரவாதத்தை கைவிடுவதாகவும் பயங்கரவாதத்தையும் பயங்கரவாத அமைப்பையும் கண்டித்து அறிக்கை விடுவது வேறு ஒன்றுமல்ல கண்துடைப்பாகும்.

10.இது உண்மையில், நாட்டுக்குள் நுளைந்து மீண்டும் பயங்கரவாத அமைப்புகளை மீளமைப்பதற்கான ஒரு உபாயமாகும். இவர்களை நம்ப முடியாது.

11.தற்கொலை அணியைச்சேர்ந்த பத்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் அவர்களைக் கையாளுபவர்களின் உத்தரவுக்காக கொழும்பு நகரில் இன்னமும் உறங்குநிலையில் இருப்பதாக நான் அறிகிறேன். எனது கூற்றை அரசாங்கம் பாரதூரமாக கவனத்தில் கொண்டு, அவர்களை இனம் கண்டு, கைது செய்ய முயற்சி எடுக்கவேண்டும்.

12.நடராஜா சேதுரூபன் போன்றவர்கள் நோர்வேயில் புல்லுக்குள் இருக்கும் விரியன் பாம்புகள் என்பது எனக்குத் தெரியும். இவர்களை ஒருபோதுமே நம்பக்கூடாது. இவரைப் போன்ற ஒருவர், இலங்கைக்குள் காலடி எடுத்துவைத்தால், அவர்களை கைது செய்து, நீதிமன்றம் முன் நிறுத்தி.

**அரசசேகரி**

தண்டனை வழங்கவேண்டும்.

13.இந்த விரியன் பாம்புகள் பற்றி இராணுவ புலனாய்வாளர்களும் ஏனைய புலனாய்வு முகவர்நிலையங்களும் தகவல் திரட்டுகளை வைத்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்தத் தகவல் திரட்டுகளின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளை வலியுறுத்துகிறேன். மேலும், எல்.ரி.ரி.ஈ அமைப்பினாலும் ஏனைய தமிழ் பயங்கரவாத அமைப்புகளினாலும் கொல்லப்பட்ட சகல சிவிலியன்களின் குடும்ப உற்றார் உறவினர் களுக்கு போதிய இழப்பீடுகளை வழங்குவது பற்றி கவனத்தில் எடுக்க வேண்டும் என அரசாங்கத்தை நான் வலியுறுத்துகிறேன்.

**முற்றும்**



## வாரமொரு குறள்

*குறள் 34:*


*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற.*

பொருள் :
மனம் தூய்மையாக இருப்பதே அறம். மற்றவை ஆரவாரத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

## பூனை அண்ணா

எங்கள் வீட்டு பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தைக் குடிக்கும்
நாற்காலியின் கீழ் படுக்கும்





## பெரியவர்களின் கடமை!


சபர்மதி ஆசிரமத்திற்கு ஒரு சிறுமி சிகிச்சை பெற வந்தாள். ஒரு தொண்டர் அவளிடம் விளையாட்டாக எலுமிச்சை பழம் ஒன்றை சபர்மதி ஆற்றில் வீசுவது போல் போக்குக்காட்டிவிட்டு பையில் போட்டுக் கொண் டார். அந்தச் சிறுமி ஆற்றில் இறங்க எத்தனித்தபோது தன் பையிலிருந்து எடுத்துக் காட்டினார். “என்னிடம் பொய் சொல்கிறீர்களா? பாபுஜியிடம் சொல்கிறேன்'' என்ற சிறுமி காந்தியிடம் புகார் கூறினாள். பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பிறகு அந்தத் தொண்டரை அழைத்து காந்தி பேசினார்.

“விளையாட்டுக்காகச் செய்தேன்” என் றார் தொண்டர். “விளையாட்டுக்காக குழந்தையிடம் பொய் சொல்கிறீர்கள். பொய் சொல்லும் விளையாட்டைக் குழந்தை ஆரம்பித்து வாழ்க்கை முழுவதும் அந்த விளையாட்டில் ஈடுபடும். விளையாட்டுக்குக்கூடப் பொய் சொல்லக்கூடாது என்று குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதே பெரியவர்களின் கடமை” என்று கனிவாகக் கண்டித்தார் காந்தியடிகள்.




## இல்லை

- யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை.
- ஜோர்தான் நதியில் மீன்கள்இல்லை.
- சிங்கப்பூரில் காகங்கள் இல்லை.
- ஹவாய் தீவில் பாம்புகள் இல்லை.
- பூட்டானில் திரை அரங்குகள் இல்லை.
- நேபாளத்தில் பகலில் மழை பெய்வதில்லை.
- காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்ததில்லை.
- பறவைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை.
- மலைப்பாம்புகளுக்கு விஷம் இல்லை.
- கிவி பறவைகளுக்கு இறக்கைகள் இல்லை.
- சிங்கமும் புலியும் ஒரே காட்டில் வாழ்வதில்லை.
- கடலில் முதலைகள் இருப்பதில்லை.
- யானையின் துதிக்கையில் என்புகள் இல்லை.
- நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை.
- நண்டுக்குத் தலை இல்லை.
- ஆமைக்குப் பற்கள் இல்லை.
- வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை.
- மண்ணுளிப் பாம்புக்கு கண் இல்லை.
- பாம்புகளுக்கு காதுகள் இல்லை.
- அன்னாசிப் பழத்துக்கு விதைகள் இல்லை.
- அத்தி, பலா மரங்கள் பூப்பதில்லை.
- அரேபியாவில் ஆறுகள் இல்லை.
- அண்டார்டிக்காவில் மரங்கள் இல்லை.
- இந்தியாவில் எரிமலைகள் இல்லை.
- உத்தரப் பிரதேசத்தில் தென்னை மரங்கள் இல்லை.



ஆறு வித்தியாசங்களை கண்டு பிடித்து

**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.



## குறுக்கெழுத்துப் போட்டி - 6

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ |
| ■ | | ■ | 5 | | |
| 6 | | 7 | ■ | | ■ |
| | ■ | 8 | 9 | ■ | 10 |
| 11 | 12 | | | 13 | ■ |
| ■ | 14 | ■ | 15 | | |

**இடமிருந்து வலம்**

1. அரசசபையில் சிரிக்க வைப்பவர்.
5. மலையக தலைநகர். (குழம்பியுள்ளது)
6. காய்ச்சலுக்கு அவித்துக் குடிப்பது.
8. பொருளின் பெறுமதி.
10. அழைக்கும் எழுத்து.
11. கசடதபற எனும் எழுத்துக்களை இப்படி அழைப்பர். (குழம்பியுள்ளது.
15. கிறிஸ்மஸ் கீதம்

**மேலிருந்து கீழ்**

2. இலங்கையைச் சுற்றி இருப்பது.
3. பார்க்க உதவுவது.
4. கண்ணதாசனால் பெருமை பெற்றது. (குழம்பியுள்ளது)
6. உள்ளம் (குழம்பியுள்ளது)
7. வில்லனின் பெண்பால். (குழம்பியுள்ளது)
9. சோகம் (தலைகீழ்)
12. இராமன் இவரை மறைந்து நின்று கொன்றான். (தலைகீழ்)
13. இத்தாலியின் தலைநகர் (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப்போட்டி - 5 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. மலர்
3. சூடை
5. போகி
7. தலை
8. பணம்
10. அறுகு
11. திம்பு
13. கிளை

**மேலிருந்து கீழ்**

1. மத்தளம்
2. போர்
4. பட்டை
6. கிணறு
9. கும்கி
10. அதிதி
12. தபு
14. பளை

### சரியான விடையை எழுதியவர்கள்

1. செ. றொபேட், 114 1/1 நியூநாம் ஸ்கொயர், கொழும்பு - 13.
2. திருமதி தா. பத்மஜோதி, 98/1, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை.
3. திருமதி எஸ். மகாலிங்கம், வோர்ட் இல. 2, முள்ளியவளை, முல்லைத்தீவு.
4. ம. ரேணுகா, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
5. பொ. மதுசாந்தன், இல. 25 கண்டிவீதி, மாங்குளம்.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 02.07.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 7**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**




சித்தார்த் நடிப்பில் கடைசியாக வெளியான 'ஜில் ஜங் ஜக்' படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றது. இப்படத்தைத் தொடர்ந்து பல படங்களில் நடிக்க சித்தார்த் ஒப்பந்தமாகியிருக்கிறார். இதில் 'தி ஹவுஸ் நெக்ஸ்ட் டோர்' என்ற படத்தில் நடிக்க இருக்கிறார். இந்த படத்தில் சித்தார்த்துக்கு ஜோடியாக அண்ட்ரியா நடிக்க இருக்கிறார். முதல் முறையாக இப்படம் மூலம் இவர்கள் ஜோடி சேருகிறார்கள். இப்படத்தை மிலண்ட் ராவ் என்பவர் இயக்கவுள்ளார். தமிழ், தெலுங்கு, இந்தி என மூன்று மொழிகளில் உருவாக இருக்கும் புதிய படத்தை சித்தார்த்தின் எடாகி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனமும், வயாகாம் 18 ஆகிய நிறுவனமும் சேர்ந்து தயாரிக்கின்றார்கள்.




தமிழில் 'இது நம்ம ஆளு' போல இந்தியில் 'ஜக்கா ஜஸூஸ்'. டு விட்டு... கைஃப் ஜோடி நடிக்கும் இந்தப் படத்... ஷூட்டிங் தொடங்கிய சில நாட்க... கொள்ள, படப்பிடிப்பு பாதியிலே... 2015-ம் ஆண்டு நவம்பரில்... படத்தில் வரும் காதல் காட்சி... நடிக்க முடியும்' என இருத... வாங்க, இப்போது மீண்டு...










"ஹீரோ, வில்லன் எல்லாம் இப்போ கிடையாது!"

எப்படிப் போகிறது நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி ஷோ?" என்னால எந்த ஒரு விஷயம் செய்ய முடியாதுனு நினைக்கிறனோ, அதை செஞ்சு பார்க்கணும்னு விரும்புவேன். இந்த ஷோ பண்றதுக்கு முன்னாடி என்னால தமிழ் சரளமாப் பேச முடியாதுனு நினைச்சேன். லைவ் ஷோ பண்ண முடியுமானு டவுட் இருந்தது. இப்ப அதை செஞ்சு பார்க்கிறேன் தளபதி படத்தை ரீமேக் செய்ய வேண்டும் என நிறையப் பேர் விரும்புகிறார்கள். ஒருவேளை அப்படிச் செய்தால், நீங்கள் எந்தக் கதாபாத்திரத்தில் நடிக்க விரும்புவீர்கள்... ரஜினியா மம்முட்டியா? "நான் அதே அர்ஜுன் கேரக்டர் பண்ணணும்னுதான் ஆசைப்படுவேன். "யாருக்கு வில்லனாக நடிக்க ஆசை?"அப்படி எல்லாம் நினைச்சதே இல்லை. என்கூட யார் நடிக்கிறாங்கங்கிறது எனக்கு முக்கியம் இல்லை. என் ரோல் பற்றிதான் நிறைய யோசிப்பேன்.""உங்களின் பிள்ளைகள் ருத்ரா, ஆதிரா எப்படி இருக்கிறார்கள்?" நல்லா இருக்காங்க. வேகமா வளந்துட்டு வர்றாங்க. என் படம் எல்லாம் முன்னர் பார்த்தது இல்லை. நானும் காட்டலை. இப்பதான் பார்க்க ஆரம்பிச்சிருக்காங்க. வேலைக்குப் போயிட்டு வர்றேன்றதுதான் இதுவரைக்கும் தெரியும். இப்பதான் நான் என்ன எல்லாம் பண்றேன்னு கவனிக்க ஆரம்பிச்சிருக்காங்க."




சிபிராஜ் நடிக்கும் புதிய படத்திற்கு கட்டப்பாவை காணோம் என்று பெயர் வைத்துள்ளனர். இதில் கட்டப்பா என்ற கதாபாத்திரத்தில் சிபிராஜ் நடிக்கிறார். மணி என்ற அறிமுக இயக்குநர் இயக்கும் இப்படத்தில் சிபிராஜுக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கிறார். மற்ற நடிக, நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் தேர்வு நடைபெற்று வருகிறது. விரைவில் இப்படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




வசூலில் சாதனை படைத்த பாகுபலி படத்தின் இரண்டாம் பாகம் தற்போது தயாராகி வருகிறது. முதல் பாகத்தில் நடித்த பிரபாஸ், ராணா, தமன்னா, அனுஷ்கா, சத்யராஜ், ரம்யா கிருஷ்ணன், நாசர் உள்ளிட்ட கலைஞர்கள் இரண்டாம் பாகத்திலும் நடிக்கின்றனர். பாகுபலி இரண்டாம் பாகத்தின் கிளைமாக்ஸ் காட்சிகளை மட்டும் 10 வாரங்கள் எடுக்க திட்டமிட்டுள்ளாராம் அதன் இயக்குநர் ராஜமௌலி. முதல் பாகத்தில் கத்திச் சண்டை, வில் அம்பு எய்தல் என அதிரடி சண்டைக் காட்சிகளில் நடித்திருந்தார் நடிகை தமன்னா. அதோடு இரண்டாம் பாகத்தில் தமன்னா, அனுஷ்கா சம்பந்தப்ப... காட்சிகள் அதிகமாக இடம் பெற இருப்பதாக தகவல்கள்... விக்கின்றன. அதிலும், குறிப்பாக இருவரும் வீர தீர சா... காட்சிகளில் அசத்த இருக்கிறார்களாம். பூஜா எனப் பெய...டப்பட்டுள்ள குதிரையுடன் தினமும் குதிரையேற்றப் பயி...சியில் அவர் ஈடுபட்டுள்ளாராம்

...ளுஃ போல
...ஸ்'. டு விட்டுப் பிரிந்த ரன்பீர் கபூர் - கத்ரீனா
...ம் இந்தப் படத்தின் படப்பிடிப்பு, 2014-ம் ஆண்டு தொடங்கியது.
...கிய சில நாட்களிலேயே ரன்பீருக்கும்-கத்ரீனாவுக்கும் முட்டிக்
...ப்பு பாதியிலேயே நின்றது. மீண்டும் சமசர ஒப்பந்தத்துக்குப் பிறகு
...டு நவம்பரில் தொடங்கிய ஷூட்டிங் மீண்டும் முடங்கியது. 'இந்தப்
... காதல் காட்சிகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். அப்போதுதான்
...யும்' என இருதரப்புமே இயக்குநர் அனுராக் பாசுவிடம் சொல்லி ஓ.கே
...ப்போது மீண்டும் ஷூட்டிங் ஆரம்பம். காதல் கசக்குதய்யா!



நட்சத்திர யன்னலில்
அபிஷேக்குமாரன் - அனுப்ரியா

# கும்கி-2



விக்ரம் பிரபு நடித்து வெளியான வெள்ளைக் கார துரை பாக்ஸ் ஆபீஸில் எடுபடவில்லை. இதனால் தன்னுடைய அடுத்தடுத்த படங்களின் மீது மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார். வாகா, வீர சிவாஜி, முடி சூடா மன்னன் என ஒரே நேரத்தில் 3 படங்கள் தற்போது விக்ரம் பிரபு கைவசம் உள்ளன. சமீபத்திய பேட்டி ஒன்றில் ""கும்கி படத்துக்குப்பின் நானும், பிரபு சாலமன் சாரும் கும்கி 2 வில் மீண்டும் இணைகிறோம். விரைவில் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும்" என்று கூறியிருக்கிறார். முதன்முறையாக பெரிய பட்ஜெட்டில் பிரபு சாலமன் இயக்கியிருக்கும் தொடரி விரைவில் வெளியாக வுள்ளது. காடு, மலை, கடல் என வழக்கமான விஷயங்களைக் கடந்து முழுக்க, முழுக்க டிரெயினில் இப்படத்தை பிரபு சாலமன் இயக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.



# ஷகிலா கதை படமாகிறது

மலையாள கவர்ச்சி நடிகை ஷகிலாவின் கதையை ஹிந்தியில் படமாக்க முடிவு செய்துள்ளனர். இந்த படத்தை கன்னட இயக்குனரான இந்திரஜித் லங்கேஷ் இயக்க உள்ளார். இந்தி, கன்னடம், தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் இப்படத்தை அவர் இயக்க உள்ளார். இதில் ஷகிலா வேடத்தில் சன்னி லியோன் நடிக்க உள்ளதாக தகவல் பரவியது. ஆனால் இதை படக்குழு மறுத்துள்ளது. இந்த படத்தில் ஷகிலா கேரக்டரில் நடிக்க நடிப்பில் கைதேர்ந்த நடிகை தேவை என்பதால் பாலிவுட் நடிகை ஹமா குரேஷி நடிப்பார் என சொல்லப் படுகிறது. இது தொடர்பாக அவரிடம் பட யூனிட்டார் பேச்சுவார்த்தையும் தொடங்கிவிட்டனர். இந்த கதையை படமாக்க முறைப்படி ஷகிலாவிடம் அனுமதி பெற்றுவிட்டதாக கூறப்படுகிறது. இதற்காக பெரும் தொகையும் ஷகிலாவுக்கு தரப்படும் என தெரிகிறது.

...தும்

...ட்டப்பாவை
...னர். இதில்
... சிபிராஜ்
...இயக்குநர்
...ஜோடியாக
...ற்ற நடிக,
...ட்பக்
...ற்று
...டம்

...தின்
...ருகிறது.

...கள்




# ...ஜாவுடன் தமன்னா

... சண்டைக்
...னா. அதோடு
...கா சம்பந்தப்பட்ட
...ாக தகவல்கள் தெரி
...ம் வீர தீர சாகச
...ஜா எனப் பெயரி
...ரையேற்றப் பயிற்

# அமலாபாலுக்கு விருது

தனுஷ் தயாரிப்பில் விரைவில் வெளியாகவிருக்கும் படமே "அம்மா கணக்கு". இந்தியில் கடந்த மாதம் வெளியான "நில் பண்டே சனாட்டா" படத்தின் தமிழ் ரீமேக். அம்மாவிற்கும் மகளுக்குமான இடையேயான உறவினை, அழுத்தமான உணர்வுகள் மூலம் பதிவு செய்து இருக்கும் திரைப்படமே "அம்மா கணக்கு". அம்மாவாக அமலாபால், மகளாக யுவா நடித்திருக்கும் இப்படத்திற்கு இசை இளையராஜா. அஸ்வினி ஐயர் தான் தமிழ், இந்தி என்று இரண்டு மொழியிலும் இயக்கியிருக்கிறார். இப்படம் தனுஷ் தயாரிக்கும் 10 ஆவது படம். இதுவரை தனுஷ் தயாரிக்கும் எந்தப் படத்தின் நிகழ்ச்சிக்கும் வந்ததில்லை. இதில் முதல் முறையாக , அவர் கலந்து கொண்டார். மேலும் அவர் பேசும் போது, இந்தப் படத்திற்காகவே அடுத்த வருடம் எல்லா விருதையும் அம்மா கணக்கு படத்தோட ஹீரோ, ஹீரோயின் "அமலாபால்" தான் வாங்குவாங்க, அந்த அளவுக்கு நடிச்சிருக்காங்க. "இசைஞானி" இளை யராஜா இந்தப் படத்திற்கு இசையமைச்சது, இந்தப் படத்தோட மிகப்பெரிய பாக்கியம். குழந்தைங்க தான் எங்க நிறுவனத்திற்கே வரம்னு நினைக்கிறேன். காக்காமுட்டை பசங்களைத் தொடர்ந்து இந்தப் படத்துல யுவா நடிச்சிருக்குறது படத்திற்கு பலம், என்று முடித்தார் தனுஷ்.



அமலாபால்-யுவா
(அம்மா கணக்கு)






# மருமகள்களுக்கு

முதலில் கணவர் மனதில் இடம் பிடிக்க வேண்டுமானால் அவர் உங்கள் குடும்பத்தினரை மதிக்க வேண்டுமானால் நீங்கள் கணவரின் பெற்றோரையும் உடன் பிறந்தாரையும் மதித்து அன்பு காட்ட வேண்டும். அன்பு காட்டுவது போல பாசாங்கு செய்யக் கூடாது, ஆத்மார்த்தமான உண் மையான அன்பாக இருக்க வேண்டும்.

பகலில் நடக்கும் வீட்டு விஷயங்களை மாமியார், மச்சாள் அது சொன்னாங்க, இது சொன்னாங்க என்று உழைத்துக் களைத்து வரும் கணவரிடம் புலம்பிப் பெரிதுபடுத்தக் கூடாது. அதே போல் நீங்களும் வேலைக்குப் போய் விட்டு வரும் வேளையில் அவர்கள் படுத்தினால் கூடப் பெரிதுபடுத்தாமல் கண் டும் காணாமல் விட்டு விடுங்கள்.

இது உங்கள் குடும்ப மன அமைதிக்காக, நாளாக நாளாகத் தங்கள் சண்டைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று தெரிந்தால் அவர்களே அமைதியாகி விடுவார்கள். ஒரு கை ஓசை பிரச்சினை யில்லை தானே.

குறிப்பாக, மருமகளின் பெற்றோர்களிடம் குடும்பத்தில் நடக்கும் பிரச்சினைகள் போகக் கூடாது, அது தீராத பெரிய பிரச்சினையாக இருந்தாலொழிய.. நான்கு சுவற்றிற்குள் கணவர் - மனைவி பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

தீரவில்லையா ஆறப் போடுங்கள், உங்களவர் எங்கும் ஓடிப் போக மாட்டார், அதற்குள் பக்கத்து வீட்டிலோ தாய் வீட்டிலோ புலம்பி ஆறுதல் தேட முயற்சிக்க வேண்டாம். உங்களவரை விட்டுக் கொடுக்கவே கூடாது. அப்படிப் புலம்ப ஆசையாக இருந்தால் கணவர் சார்ந்த உறவுகளிடம் பக்குவமாக (விட்டுக் கொடுக்காமல் கவனமாக வார்த் தைகளைக் கையாள வேண்டும்) எடுத்துச் சொல்லலாம்.

மருமகளின் பெற்றோர்களை விட ஏன்டா இப்படி செய்யுற? என்று கணவரை அவர் சார்ந்த உறவுகள் கேட்கும் உரிமை அதிகம், கணவருக்கும் தன் தவறுகள் விளங்கும். நீங்கள் கத்திப் பேசி சாதிக்க முடியாத பெரிய விஷயங்களைக் கூட உங்கள் புகுந்த வீட்டினரால் சாதிக்க முடிந் தால் அது உங்களுக்குக் கிடைத்த வெற்றி தானே. கணவரின் உறவுகளையும் உணர்வு களையும் மதியுங்கள், கொண்டாடுங்கள்.

அவரது தாய் பத்து மாதங்கள் சுமந்து பெற்று நல்ல முறையில் வளர்த்துப் படிக்கச் செய்து ஆளாக்கித்தந்திருக்காவிட்டால் உங்களுக்கு எப்படி அவர் கிடைத்திருப்பார்?

உதிரங்கள் கொதிக்க உடல்கள் கலந்த உறவாக மட்டுமல்லாமல் உணர்வுகள் ஒன்றாகி உள்ளங்கள் ஒன்றாகி ஆன்மாக்கள் சங்கமித்த உறவாக நினைத்துப் பாருங்கள். உங்களிலிருந்து அவரைத் தனியே பிரித்துப் பார்க்காமல் நீங்கள் தான் அவர், அவர் தான் நீங்கள் என்று உணர்ந்து வாழ்ந்து பாருங்கள். அள்ள அள்ளக் குறையாத காதலை வழங்குங்கள்.

அந்தச் சம்சார சங்கீதத்தில் இனிமைகள் இசையாகும். நீ பெரிதா? நான் பெரிதா என்ற அகந்தையோ எத்தனை முறை அனுசரித்தேன், விட்டுக் கொடுத்தேன் என்ற வாதங்களோ அர்த்தமற்றவை. உங் கள் கணவர் உங்களைக் கண்டு புலியோ சிங்கமோ என்று பயப்படக் கூடாது, குட்டி போட்ட பூனையாய்ச் சுற்றி வர வேண்டும். எந்தச்சூழலிலும் உங்களவரை எதற்காகவும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்காதீர்கள்.


கணவரின் உடன் பிறந்தவர்களையும் பெற்றோரையும் உறவுப் பெயர்களிட்டு உரி மையுடன் அழையுங்கள். அன்பைக் கொட் டுங்கள், பதிலுக்குக் அன்புமழை பூமழை யாகக் கொட்டும் கணவர் தன் தாயின் சமையலைப் புகழ்கிறாரா? பொறாமையில் பொசுங்க வேண்டாம், காதிலே புகை வர விட வேண்டாம். அப்படியா, நான் அவங்க கிட்டே கத்துக்கிறேன், அதே போலச் செய்ய முயற்சி பண்றேன்.

இதில் தவறில்லையே. அதே போல் மாமி யார் செய்யும் சிறு நல்ல செயல்களையும் வாயாரவும் மனதாரவும் புகழுங்கள், நாத் தனாரின் ஆடை, அணிகலனைப் பாராட் டுங்கள். இன்முகத்துடன் பேசிப் பழகுங்கள். உங்களுக்கு வெளியில் சாப்பிட ஆசையாக இருக்கும் போது மாமனார், மாமியாரையும் அழையுங்கள். வர மறுத்தால் அவர்களுக்குப் பிடித்த உணவுப்பொருள் வாங்கிக் கொடுங் கள், பிறந்த நாள், திருமண நாள், பண்டிகை நாட்களின் போது அவரவர் தேவைகளை அறிந்து பரிசுப்பொருட்கள் கொடுத்து அசத் துங்கள். இப்படிப்பட்ட மருமகளை யாருக்குப் பிடிக்காது?!

நீங்கள் எப்படி நடக்கிறீர்களோ உங் களைப் பார்த்து வளரும் நாளைய தலை முறையும் அவ்வாறே வளரும். நீங் கள் எப்படி உங்கள் புகுந்த வீட்டில் பழகு கிறீர்களோ அதே போல ஏன் அதற்கு ஒரு படி மேலே உங்கள் கணவர் உங்கள் சொந்தங்களை மதித்துப் பாராட்டுவார். இப் படி செய் என்று சொல்வதை விட நம்மை முன்மாதிரிகளாக்கிக் காட்டுவோமே.

பணப்பிரச்சினை, உடல், மனப்பிரச் சினை, வெளிப்பிரச்சினை என்று ஆயிரம் பிரச்சினைகளுடன் அலுத்து வரும் கண வருக்கு இன்முகத்துடன் பிடித்தது செய்து கொடுத்துப் பாசமாகப் பழகிப் பாருங்கள், பிரச்சினையா? அப்படியென்னால் என்ன என்று கேட்பீர்கள். விட்டுக் கொடுத்தார் கெட்டுப் போனதில்லை. கெட்டுப் போனவர் விட்டுக் கொடுத்ததில்லை.

கணவரோ அவர் குடும்பத்தினரோ என்றோ ஒரு நாள் பேசிய சுடுசொற்களை மனதில் வைத்துப் புழுங்கி உங்கள் நிம்மதி யையும் குடும்பத்தினர் நிம்மதியையும் குலைக்காதீர்கள். பொறுமையும் அன்பும் புரிதலும் இருப்பவர்களுக்குச் சொர்க்கமே இல்லமாகும்.




*மோர்க்குழம்பு செய்யும்போது தயிர் திரிந்து விடாமல் எப்படி செய்வது?*

மோரோ அல்லது தயிரோ சேர்ப்பது என்றால், அதனுடன் அரை டீஸ்பூன் முதல் ஒரு டீஸ்பூன் வரை கடலை மாவு சேர்த்து கட்டிகள் இல்லாமல், கரைத்து ஊற்றிக் கொதிக்க விடவும். மோர்க்குழம்பு திரிந்து போகாமல் வரும்.

*அரிசியை எவ்வளவு கொஞ்சமாக வாங்கினாலும் சிறிது நாட்களிலேயே வண்டு வந்து விடுகிறதே ஏன்?*

அரிசியுடன் சிறிது கல் உப்பு அல்லது செத்தல் மிளகாய் அல்லது வேப்பம் இலையை துணியில் கட்டி போட்டு வைத் தால் வண்டு வராது.

*மாவை எவ்வளவு நேரம் பிசைந்தாலும் சப்பாத்தி மிருதுவாக வருவதில்லையே... ஏன்?*

சிறிது வெதுவெதுப்பான நீர் சேர்த்துப் பிசைந்தால் சப்பாத்தி மிருதுவாக வரும்.

# வாய் துர்நாற்றமா?

வாய் துர்நாற்றத்தால் மற்றவர்களிடம் முகம் கொடுத்து கதைப்பதற்கு பெரிதும் கஷ்டப்படுகின்றீர்களா? அல்லது நீங்கள் பேசும் போது அவர்கள் முகத்தை திருப்பிக் கொள்வதால் நீங்கள் அவமானமடைந்தது போல உணர்கின்றீர்களா? கவலையை விடுங்கள். அதற்கு முதலில் வாயில் துர் நாற்றம் ஏற்படுவதற்கான காரணங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். வயிற்றில் ஏற்படும் புண்கள் தான் அதற்கு முதலாவது காரணமாக விளங்குகின்றது. ஆமாம் அல்சர் எனப்படும் இவ்வயிற்றுப் புண்களால் வயிற்றில் உருவாகும் நாற்றத் தன்மை வாய் வழியாக வெளியேறும் போது தான் வாய் துர்நாற்றம் அதிகம் ஏற் படுகின்றது. அத்துடன் கீழ் வரும் சில விடயங்களும் வாய் துர்நாற்றத்தை ஏற் படுத்துவதில் முக்கிய இடத்தைப் பிடிக்கின் றன. உடம்பில் நீர்ச்சத்து குறைந்து போகின் றமை. புகையிலை, வெற்றிலை, பாக்கு போன்றவற்றை வாயில் போட்டு மெல்லுதல். புகைக்கும் பழக்கம். போதைப் பொருட்களை சாப்பிடுதல். தொண்டையில் உள்ள ரொன் சில் எனப்படும் சுரப்பியில் தொற்று ஏற்படுதல். இவ்வாறு தொண்டையில் உருவாகும் கிருமித் தொற்றும் வாய் துர்நாற்றத்திற்கு மிக முக்கிய காரணமாக அமைகின்றது.

சிலருக்கு ஒரு வழி பாதையான உண வுக்குழாயினூடாக உணவு பையிலிருந்து அமிலங்கள் மேல் நோக்கி வந்து போகும். சுந-குழைஎனப்படும்இச்செயற்பாட்டினாலும் வாயில் துர்நாற்றம் ஏற்படுகின்றது. உணவு குழாயினூடாக உணவு மண்டலத்திற்கு சென்ற உணவு சுமார் 4 மணித்தியாலத்தில் செறிமானம் அடைய வேண்டும். நான்கு மணித்தியாலத்திற்கு மேல் உணவு செரி மானம் அடையாமல் இருக்கும் போது அதிலிருந்து வெளிப்படும் புளிச்ச நாற் றம் வாய் வலியாகவே வெளியேறும் அது வும் வாயில் துர்நாற்றம் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இதனையே



அஜீரணக்கோளாறு என்கின்றோம். இவ் வாறு பல்வேறு வழிமுறைகளின் மூலம் வாயில் ஏற்படும் துர்நாற்றத்தை எப்படி இலகுவாக போக்கி கொள்ளலாம் என்பதை இனி பார்ப்போம். உடனடி நிவாரணி எனும் போது வாசனைப் பொருட்களான கராம்பு, கொத்தமல்லி இலை என்பவற்றை வாயில் போட்டு மெல்லுதல். குடற் புண்னை போக்குவதற்காக காலையில் எழுந்தவு டன் தேநீருக்குப் பதிலாக தினமும் 4 டம்ளர் சுத்தமான நீரை அருந்த வேண் டும். அரை லீற்றர் நீரில் புதினா சாறு, எலுமிச்சை சாறு ஆகியவற்றை சம அள வில் கலந்து வாயை கொப்பளிப்பதுடன் தினமும் அருந்தி வருவதன் மூலமும் வாய் துர்நாற்றத்தைப் போக்கமுடியும். அதனுடன் உப்புசிறிதளவை சேர்த்துக் கொள்வதன் மூலம் பயனை இரட்டிப்பாக்கிவிட முடியும். அத்துடன் காலை மாலை என இருவேளையும் பற்களை நன்றாக துலக்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் பல் இடுக்குகளில் தேங்கி விடும் உணவு துகல்களை அகற்றி மாதம் ஒரு தடவையேனும் பல் வைத்தி யரிடம் காட்டி சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சாப்பிட்டப் பின் வாயை நன்றாக கொப்பளித்து சுத்தம் செய்துகொள்ள வேண் டும். புகைப்பழக்கம் உள்ளிட்ட போதைப் பொருட்களை வாயில் போட்டு மெல்வதை முற்றாக தவிர்க்க வேண்டும். அதிகமான காரம், புளிப்புச் சுவையுள்ள உணவுகளை சாப்பிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண் டும். வாய் சுகாதாரத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

## போட்டிச் சிறுகதை – 6



பெயர்:- நடராசா இராமநாதன்
முகவரி : 'கோகுலம்' உடையார் கட்டு வடக்கு உடையார்கட்டு
சிறுகதை : கொட்டப்பெட்டிப் பெத்தாச்சி

# கொட்டப்பெட்டிப்பெத்தாச்சி

இவவ கொட்டப்பெட்டிப் பெத்தாச்சி எண்டு தான் நாங்கள் சொல்லிறனாங்கள். ஏனெண்டால் இவவிற்கு மூண்டு சகோதரியள் இருந்தவை. அவையளில் இவ தான் மூண்டாவது. இவ எங்கட அப்பான்ர, அப்பான்ர,தாய் மற்ற சகோதரிகள் ரெண்டுபேரையும் பெரிய பெத்தாச்சி,சின்னப்பெத்தாச்சி எண்டு கூப்பிட்டுக்கொண்டு இவவை கொட்டப்பெட்டிப் பெத்தாச்சி எண்டு தான் கூப்பிடுகிறனாங்கள். இவவுக்கு பேர் மரகதம். பெத்தாச்சி செத்தும் பதினைஞ்சு வரிசமாப்போச்சு. கொட்டப்பெட்டிப் பெத்தாச்சி எங்களோட நல்ல அன்பு. எப்பவும் நல்ல சுத்தம்,தோஞ்சு,குளிச்சு, வீடுவாசல்களை கூட்டியள்ளி வடிவா வைச்சிருப்பா. பெத்தப்பாவை எங்களுக்கு தெரியாது. அவர் நாங்கள் சின்ன வயதாயிருக்கேக்கயே செத்துப்போனார். பெத்தப்பா செத்துப்போனதால பெத்தாச்சி குங்குமப்பொட்டு வைக்கிறதில்லை. நிறச்சீலையள் உடுக்கிறதில்லை. எப்பவுமே வெள்ளைச்சீலை தான் உடுப்பா. பெத்தப்பாவின்ர நினைவுநாளைச் சரியாக் கணக்குவைச்சு அவரின்ர துவசத்தை நல்ல பக்திபூர்வமாகச் செய்வா.எங்களோட எல்லாம் நல்ல அன்பாகக் கதைப்பா. ஒருத்தரோடையும் ஒரு பொல்லாங்கும் இல்லாம நடப்பா.

விடிய வெள்ளணவாக, மாடுகளில் பால் கறந்து விலைக்குக் குடுக்கிற ஆக்களுக்கெல்லாம் குடுத்துவிட்டு, எங்களுக்கும் பால் காய்ச்சித்தருவா. நாங்கள் வீட்டில எங்கையிருந்தாலும் தேடித்தேடிக் கொண்டு வந்து தருவா.'ச்சா..... அந்த பாலின் ருசி தான் ... என்ன ருசி " எங்கட அப்பாவும் அம்மாவும் எங்களை கவனிச்சதை விட எங்கட கொட்டப்பெட்டிப் பெத்தாச்சிதான் எங்களை நல்லா கவனிச்சவ அதிகாலை ஐந்து மணிக்கு அலாம் வைச்சிட்டுப் படுத்தனான். ஆனால் இன்னும் அலாம் அடிக்கேல்லை. வெள்ளணவாக முழிச்சிட்டன். நித்திரையால் படுக்கையைவிட்டு எழும்பலாம் எண்டால் எழும்பேலாமல் கிடக்கு ஒவ்வொரு நாளும் அவ்வளவு வேலை.

காலையில் மூத்தவனை இங்கிலிஷ் வகுப்புக்குக் கொண்டுபோய் விட வேணும் பிறகு மற்றப்பிள்ளைகளுக்குச் சாப்பாடு செய்ய வேணும். இவர் வேலைக்குப் போறதுக்கிடையில் இங்கிலிஷ் வகுப்புக்குப்போன பிள்ளையை ஏற்றிக் கொண்டு வருவார். அதுக்கிடையில் மற்றப் பிள்ளைகளுக்கான வேலைகள் எல்லாம் செய்து, அவர்களை பள்ளிக்குடத்துக்கு அனுப்ப வேணும். ராத்திரி தோய்க்கவென நனைய வைச்ச உடுப்புகளை தோய்க்க வேணும். விதானை வீட்ட ஒரு அலுவல் அதுக்கும் போக வேணும்.

நேற்று மாலதி தன்ர மகளுக்கு சாமத்தியத்திற்கு வந்து சொன்னவள் அதுக்குக்கூட போக நேரமில்லாமல் போச்சு. அங்கையும் ஒருக்காக் கண் காட்டவேணும் பால்மா முடிஞ்சுது அது வாங்க வேணும். ச்சா............ நல்லா பால்மாடு ஒண்டு நிண்டது. போனமாதந்தான் வித்தனாங்கள் அதை பராமரிக்க நேரங்காணாது.என்ன செய்யிறது. எப்பதான் எப்பன் ஆறுதலா நிக்கிறது. ஒவ்வொரு நாளும் ஓட்டந்தான். பெத்தாச்சி எங்களுக்குக் காய்ச்சித்தந்த அந்த பசும்பால் இப்பவும் நாவின்ர சுவை அரும்புகளில் இருந்து இனிக்குது. அவவின்ர நினைவுகளோட

சின்னவன் எழும்பி அழுகிறான்
'என்னப்பா எழும்புங்கோவன் நேரமெல்ல போகுது..." இவர் இன்னும் நித்திரையால எழும்பேல்ல அந்தாளும் என்ன செய்கிறது. இஞ்சையிருந்து ஏழெட்டுக்கட்டை தூரம் சைக்கிளோடி மேசன் வேலைக்குப் போறது. மழை வெய்யில் எண்டு பாராமல் பஞ்சிப்படாமல் போவார். வேலை சரியான கஸ்டம் எண்டு சொல்லுவார். உயரங்களில் ஏறி இறங்குகிறது பாரமான கல்லுகளைத் தூக்கிறது. இப்ப வெய்யில் எண்டாலும் வெய்யில் தான். உதால சயிக்கிளில் கடைக்கு போட்டு வாறதுக்கிடையில் செத்துப்போறம். ஏன்னெண்டு தான் உந்த வெய்யிலுக்க நிண்டு வேலை செய்யுதுகளோ. எங்கட ராசுத் தாத்தாவும் உப்பிடித்தான் வெய்யிலுக்க நிண்டு மேசன் வேலை செய்து ஏலாவாளியாப் போனார்.



ம் சுடுதண்ணியை கொதிக்க வைச்சு, வெட்டி அவியவைச்ச மரக்கறியள அதுக்க போட்டு, நூடில்ஸ் பைக்கற்றை உடைச்சுக் கொட்டி கலந்து
'இங்கிலீஸ்' வகுப்புக்கு போன மூத்தவனை இவர் போய்க் கூட்டிக் கொண்டு வந்திட்டார்.
" வாருங்கோ வாருங்கோ எல்லாரும் சாப்பிடுவம்" பிள்ளையள் ஒவ்வொரு வருக்கும் சாப்பாடு போட்டுக்குடுக்க கரண்டியால அவையள் சாப்பிட
'ஆறுதலாச் சாப்பிட நேரமில்லை கெதியாச் சாப்பிடுங்கோ பள்ளிக்கூடம் போக வேணும்" பிள்ளைகளை வேகப்படுத்தி
"என்னப்பா உங்களுக்கும் சாப்பாட்டைப் போடட்டே"
'என்ன எனக்கும் நூடில்ஸ் வேணாம் நான்கடையில சாப்பிடுகிறன் நீங்க பிள்ளையளுக்குக் குடுங்கோ' சொல்லிக் கொண்டே அவர் வேலைக்குப் போக அவசரமாக வெளிக்கிடுகிறார். ச்சா மனுசனுக்குப் புட்டும் பொரியலும் எண்டாத்தான் விருப்பம் அல்லாட்டி இடியப்பம் சம்பல் சொதி என்ன செய்யிறது எனக்கும் அதுகள் தான் விருப்பம் செய்யிறத்துக்கு எங்க நேரம்.மூத்தவனை கொண்டு போய் ஒரு பள்ளிக்குடத்திலை விட்டிட்டு மற்றவனை இன்னொரு பள்ளிக்குடத்திலவிட்டுச்சா கொட்டப்பெட்டிப் பெத்தாச்சி விடியவெள்ளணவாகப் பாலப்பம் சுட்டு சுளகில அடுக்கிவைப்பா. ஒவ்வொரு அப்பமும் ஒவ்வொரு பூரண சந்திரன் போல வட்ட வடிவாக இருக்கும். நல்லாக்காய்ஞ்ச பொச்சுமட்டையளை தேடி எடுத்துக்கொண்டு வந்து அளவாக் கொத்தி அடுக்கிப்போட்டு அடுப்பங்கரையில் இருந்து சட்டிக்கை மாவைக் கரைச்சு ஊத்தி அப்படியே சட்டியோட தூக்கி ஒரு ஆட்டு ஆட்டி நல்ல வட்டமாக அதுவர, பிறகு கொஞ்சத் தேங்காய் பாலை நடுவில ஊத்தி அது கொதிக்கும் வரை பார்த்து மேலே சட்டியை நிமித்தி மூடி அதுக்கையும் பொச்சுமட்டைத்தணலைப் போட்டு அடுப்பை ரெண்டு தரம் ஊதி அப்பங்களைச் சுட்டு சீனி தூவி அடுக்கிவிட்டால் பார்க்க எவ்வளவு வடிவாக இருக்கும் தின்ன எவ்வளவு ருசியாய் இருக்கும்.

பெத்தாச்சி எல்லாரையும் கூப்பிட்டுக கூப்பிட்டுக் குடுப்பா. எங்கட சின்னையா அது தான் அப்பான்ர தம்பியார் குமாரவேலு அவர் வேலைக்கு போக முன்னம் வீட்டை வந்து கொட்டப்பெட்டி பெத்தாச்சியை பாத்திட்டுத்தான் போவார். 'எட குமாரவேலு இஞ்ச வா இதில அப்பங்கிட்க்கு ரெண்டைத்தின் அங்க குசினிக்க பிங்கஞசியும் கரைச்சுவைச்சிருக்கிறன். குடிச்சிட்டு எனக்கும் கொஞ்சம்வை. நான் பிறகு குடிக்கிறன்.' ச்சா கொட்டப்பெட்டி பெத்தாச்சியின் வாழ்க்கை முறையை எண்ண எண்ண எவ்வளவு ஆசையாய் கிடக்கு.

சின்னவனை சயிக்கிளில் ஏத்திக்கொண்டு போய பள்ளிக்குட வாசலில் இறக்கி விட புத்தக பாக்கை எடுத்தலன் போகாமல் நிக்கிறான். பாடசாலை வாசல் பெரிய அமளியாக் கிடக்கு சைக்கிள்கள் மோட்டார் சைக்கிள்கள் ஓட்டோக்கள் என பிள்ளைகளை கூட்டி வந்து இறக்குவதும் போவதுமாக "என்னடா கேக்கிறாய் ." சின்னவனைப் பார்த்துப் பல்லை நெறுமுகிறேன் பின்னால் நிரையாக் கிடக்கும் வேலையின் பழுக்கள் என்னை அப்படி செய்ய வைத்தன அவன் போகாது நின்ற காரணம் புரிந்தது , எனது பேர்சைத் திறந்து இருபது ரூபாத் தாளை கொடுத்தேன் .நாங்களும் பள்ளிக்குடம் போகேக்க கொட்டப்பெட்டிப் பெத்தாச்சி இப்படித்தான் தன்ரை கொட்டப்பெட்டியை எடுத்து மூடியை திறந்து ஐம்பது சதம் ஒரு ரூபா எண்டு தருவா எவ்வளவு சந்தோசமாக இருக்கும் வளவுக்க இருக்கும் தென்னோலைகளைப் பின்னி பாளைகள் பொச்சுமட்டைகள் எல்லாம் பொறுக்கி விற்பது பால் விற்பது வேப்பஞ் சருகுகள், பூவரசம் இலைகள் என்பவற்றை சேகரித்து விற்பது சாணகம் பிளுக்கை என்பவற்றை விற்பது சீட்டுப்பிடிப்பது என கொட்டப்பெட்டி பெத்தாச்சி காசுகளை, பனையோலையால இளைச்ச நல்ல மூடி போட்ட கொட்டப்பெட்டி அடுக்குகளுக்க தாள்க் காசுகளும் நடுப்பெட்டீக்க சில்லறைக் காசுகளும் இருக்கும். இப்படியான கொட்டப்பெட்டியை பாவிப்பதால் நாங்கள் இவவை கொட்டப்பெட்டி பெத்தாச்சி எண்டு சொல்லுறனாங்கள்.

மாலதி வீட்டை போய், உடன் சாமத்தியத்திற்கு நேற்று வராததுக்கான ஏதோ ஒரு காரணத்தை சொல்லி, ஆற அமர்ந்து கதைக்க நேரமில்லாத போதும், காட்டிக் கொள்ளாமல் இருந்து கதைச்சு, போனை எடுத்து நேரத்தைப் பார்க்க பதினொருமணியாகியிருந்தது. படலைக்க வாற மீன்காரன் போயிருப்பான். சந்தைக்கையும் மீன் முடிஞ்சிடும் என்ன செய்யிறது.

கடைக்குப்போய் மீன்ரின் ஒன்று வாங்கி மரக்கறியள் வாங்கி சைக்கிள் ஓடும் போது நினைவலைகளும் கூடவே
நான் பாடசாலையில் படிக்கும் காலம். அவசர அவசரமாகப் பாடசாலைக்கு வெளிக்கிடுறன் என கூடப்படிக்கும் மைதிலி எங்கட படலைக்க நிண்டு கூப்பிடுகிறாள்.

[தொடர்ச்சி 18இல்]

**இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.**

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 6

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..........................................
..........................................
சிறுகதையின் இலக்கம் : ..........................................
எழுதியவர் பெயர் : ..........................................
சிபார்சு செய்பவர் பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தொலைபேசி இலக்கம் : ..........................................
.......................................... ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**





ஜெ. யோகராஜ்

# MS OFFICE இன் பயன்களும் பாவனையும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)


இங்கேகாட்டப்பட்டுள்ள தெரிவுகளை மேற்கொண்டு அதன் பின்னர் உரிய நிறம் தீட்டினால் கீழே காட்டப்பட்டுள்ள வழிகாட்டல் வரைபடத்தை பெற்றுக் கொள்ளலாம்.




1. வித்தியாசமான எழுத்துருக்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது ஒரு விடயம்.
2. ஆவணத்தில் ஒரு சொல்லை தேடுதல், அதனை வேறு ஒரு சொல்லால் பிரதியீடு செய்தல்.

முதலில் வித்தியாசமான எழுத்துருக்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி பார்ப்போம். ஆவணத்தில் ஆங்கிலம், தமிழ், சிங்களம் மற்றும் ஏனைய மொழிகளை பயன் படுத்துவதற்கான வசதிகள் உள்ளன. இதற்கு இயங்குதளம் ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது. ஒரு எழுத்துருவை சாதார ணமாக ஆங்கிலத்தில் 'Font'என்று குறிப் பிடப்படும். இன்று நாம் ஆங்கிலத்தில் உள்ள இரண்டு வித்தியாசமான எழுத்துருக் களையும், தமிழில் உள்ள எழுத்துருக்களை யும் பார்ப்போம். ஒரு எழுத்துருவை தெரிவு செய்ய வேண்டுமாயின், அதற்குமேல் மூலை யில் உள்ள வசதிகளில் ஒன்றை பயன்படுத்த வேண்டும். அதற்கான வரைபட விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

முதலில் ஆங்கில எழுத்துருவான Times NewRoman எழுத்துருவை எவ்வாறு பயன் படுத்தலாம் என்று பார்ப்போம். இந்த எழுத்துரு ஆங்கில மொழியில் பெரும் பாலும் பயன்படுத்தப்படுகின்ற ஒரு எழுத்துரு வாகும்.





அதேவேளை, ஆங்கில எழுத்துருக்களில் மற்றுமொரு எழுத்துருவான Arial இவ்வாறு பயன்படுத்தலாம்.

எழுத்துருக்களில் எழுத்துக்களின் வடி வங்கள் வித்தியாசப்படும். இந்த வடிவங் கள் குறிப்பிட்ட எழுத்துருக்களுக்கு தனித் துவமானவை. அதேவேளை, ஆவ ணங் களை தமிழில் எழுதுவதற்கு Bamini (பாமினி) என்னும் எழுத்துரு பயன்படுத் தப்படுகிறது. அதற்கான வரைபட விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இந்தக் கூண்டில் Bamini என எழுது வதன் மூலமும் குறிப்பிட்ட எழுத்துருவை பெற்றுக் கொள்ளலாம். பாமினி எழுத்துரு வுக்கு பதிலாக Kalaham எனும் எழுத்துரு வையும் பயன்படுத்தலாம். ஆனால், இவை இரண்டுக்கும் இடையில் எழுத்து வடிவ வித்தியாசங்கள் உண்டு. இத்த கைய எழுத்துருக்கள் மூலம் ஆவணங் களை தயாரித்து மற்றுமொரு கணனிக்கு வலையமைப்பின் மூலம் அனுப்பினால், அந்த ஆவணத்தை மற்றைய கணனி மூலம் வாசித்து அறிந்து கொள்வ தற்கு அந்தக் கணனியிலும் குறிப் பிட்ட எழுத்துரு பதியப்பட்டிருத்தல் வேண்டும். இது ஒரு அசௌகரியமான செயலாகும். கணனி தொடர்பாடல்ளை மேற்கொள்கின்றவர்க ளுக்கு இது ஒரு சுமையாகவே கருதப்படும். இந்த எழுத்துருக்கள் எல்லாம் நியம எழுத்துருக்கள் (Unicode Fonts) அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு மாற் றுத் தீர்வாக நியம எழுத்துருக்களும் சந்தை யில் காணப்படுகின்றன. Microsoft நிறு வனம் Latha எனும் எழுத்துருவை அறி முகப்படுத்தியுள்ளது. இந்த எழுத்துரு Microsoft நிறுவனத்தால் சமகாலத்தில் வெளியிடப்பட்ட இயங்கு தளங்களான Windows XP, Windows 7 போன்ற இயங்கு தளங்களில் காணப்படுகின்றன.

அடுத்து ஒரு ஆவணத்தில் ஒரு சொல்லை தேடுவது எவ்வாறு என்று பார்ப்போம். அதற்கான வரைபட விளக்கம் கீழே தரப் பட்டுள்ளது.




(தொடரும் ...)

# நம்நாட்டு திருத்தலப் பாடல்



பாடல் -செருத்தனை வாழும்
ஆலயம் - புளியங்கூடல் மகாமாரி அம்மன்
பாடல் வரிகள் - வேலணையூர் சுரேஷ்
பாடியவர் -எஸ். ஜி. சாந்தன்
இசை - இசைப்பிரியன்

பல்லவி

செருத்தனை வாழும் மகாமாரி அம்மா
பெய்யென பெய்வாள் அருள்மாரி
விரும்பியே அருளும் உபகாரி - அம்மா
வினைகள் தீர்த்திடும் கருமாரி
நாங்கள் உருகிட தானும்
உருகுவாள் அம்மா மகமாயி
இரு கண்ணென எமை
காப்பவள் அருள்மாரி

சரணம் 1

வள்ளல் நாயகி முகம்பார்த்தால் - எம்
வல்லமை சேர்ப்பாள் நம் ஆத்தா
துள்ளும் அலைகள் தாலாட்டா - அம்மா
தூங்காது இருந்து ஊர் காப்பாள்
தாயின் அன்பே பேரின்பம் - அம்மன்
தாழடி தொழுதால் ஆனந்தம்

சரணம் 2

எங்கள் பார்வதி வரம் கேட்டால் - எம்
அன்னையாய் வந்து பால் வார்ப்பாள்
தென்றல் நெல்லென சீராட்ட - அம்மா
பெய்யவர் எங்களை கண்பார்ப்பாள்
தாயின் அன்பே பேரின்பம் - அம்மன்
தாழடி தொழுதால் ஆனந்தம்



# தொலைவின் கனம்

அமானுஷ்யங்களின் உறைதலில்
ஆற்றுப்படுத்தப்பட இயலாத
அந்தகார இருள்வெளி
விட்டில்களை தொலைத்து
ஏதோ ஒன்றிற்காய்
இன்னும் அழுது கொண்டிருந்தது.

ஏகாந்தங்களை தொலைத்து
பகிரப்படமுடியாத
மனகிடைக்கைகள்
தனித்து நகரும்
இரகசிய இரவின்
பிரதி விம்பமாய்
விடியாதிருகின்றது.

நிகழ் வெளியின்
பயணத்தில்
நகர முடியாத தேராய்
தொலைத்தலின் கனம்
தீராத வலியின் சுழிப்போடு
நகர முடியாது
அந்தரித்துக் கொண்டிருக்கின்றது.

தொலையாத வெளியின்
உஷ்ணத்தில்
உறைந்த
நிகழ் உடல்
தொலைதலின் அல்லது
தொலைத்தலின்
ஆற்றுப்படுத்த முடியாத
உச்ச மனக்கிடக்கையில்
அழுது அழுது
தொலைந்து போகிறது.

தொலைவின் கனம்
அது
பெருத்த துயர்
தொலைத்தல் கனம்
அது
மனம் அறுந்த துயர்.

வெற்றி அஃஷ்யந்தன்

# சந்தர்ப்பவாதிகள்

## அத்தியாயம்-7

நிவேதாவுக்கு அன்று லீவு நாள். தனது பன்னிரண்டாவது வயதில் கனடாவிற்கு படிக்க வந்தவள் தனது 27 ஆவது வயதிலும் அந்த மண்ணில்தான்!

ஆறதலாக உட்கார்ந்து ஆர்தர் ஹெய்லியின் புதுநாவலொன்றை வாசித்துக் கொ்ணடிருந்தாள். ஆர்தர் ஹெய்லி ஆங்கில இலக்கிய உலகில் மிகப் பிரபல்யமான ஓர் எழுத்தாளர். பன்மொழிகளில் அச்சாகிக் கொண்டிருக்கும் அவர் நாவல்கள் கோடிக் கணக்காக உலகெங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. நிவேதா அதிகம் விரும்பி வாசிக்கும் ஆங்கில நாவலாசிரியர்களில் ஆர்தர் ஹெய்லி மிக முக்கியமானவர். தன் நாவல்களில் விறுவிறுப்பான கதையோடு, அறிவியல் தகவல்களையும் புகுத்தி விடுவதில் கில்லாடி இவர்.

திரைப்படமாக வந்த எயார்போர்ட் என்ற நாவல் இதற்கு ஓர் உதாரணம். இதை வாசிக்கும்போது நாமும் ஒரு விமானப்பயணியாகி விடுவோம். நாவலின் கடைசிப் பக்கத்தை வாசிக்கும் போது, விமான நிறுவனங்கள், ஊழியர் கள், விமான நிலையங்கள் என்று விமானம் சார்ந்த பல்வேறு விடயங்கள் பற்றிய தகவல்களை அறிந்திருப்போம். அத்தோடு விறுவிறுப்பிற்குப் பஞ்சமில்லாத ஒரு கதையோடுதான் இந்தத் தகவல்கள் இழையோடும்.

நிவேதாவுக்கு தமிழ் நாவல்களிலும் மிகவும் ஆர்வம் உண்டு. நிகழ்வுகளை அழகாகக் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் சாண்டில்யனை அவளுக்கு மிகவும் பிடிக்கும். ராஜமுத்திரை, கடல் புறா, யவனராணி என்று அவருடைய எலலா நாவல்களையும் சேகரித்து வைத்திருக்கிறாள். தமிழ் எழுத்தாளர்களில் அடுத்து அவரைக் கவர்ந்தவர் அமரர் கல்கி. பொன்னியின் செல்வனை இவர் எப்படி எழுதி முடித்தார் என்று எப்பொழுதுமே இவள் வியப்பதுண்டு.

நாவலை வாசித்துக் கொண்டிருந்த நிவேதாவின் கண்கள் எழுத்துக்களில் பதிந்தாலும், மனம் முழுமையாக எழுத்துக்களை ரசிக்க மறுத்தது. காரணம் முதல் நாளிரவு அவள் அப்பாவிடம் இருந்து வந்த தொலைபேசி அழைப்புத்தான்.

"பிள்ளை எங்கிட தமிழிலில எதுக்கும் நல்ல பழமொழியள் வைச்சிருக்கினம் பருவத்தே பயிர் செய் எண்டு சொல்லுவினம். புத்தகங்களை ஏராளமா வாசிக்கிற உனக்கு நான் சொல்லித்தர வேண்டியதில்லை."என்று தன் பேச்சைத் தொடங்கிய அவள் தகப்பன், அவள் குடும்ப வாழ்வில் இறங்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியதை நிவேதா நினைத்துப் பார்த்தாள்.

இந்தத் தடவை வெறும் பேச்சோடு விட்டுவிடாமல், இலண்டன் தொலைபேசி இலக்கம் ஒன்றையும் அவளிடம் கொடுத்தது அவள் முற்றிலும் எதிர்பாராத ஒன்று.

"பொடியன்ர பெயர் சத்யன். வயது முப்பது. இங்கிலாந்தில பட்டப்படிப்பை முடிச்சிட்டு இரண்டு மாதத்தில ஊருக்கு வரப்போறன். இணுவிலில ஒரு இங்கிலீஸ் டீச்சரைக் கிட்டடியில பார்த்திருக்கினம். பொடியனர தகப்பன் என்ர நல்ல சினேகிதன். என்னோட ஒண்டாப் படிச்சவர். பொடியனுக்கு குடிப்பழக்கம், சிகரெட் பத்திற பழக்கம் ஒண்டும் இல்லையெண்டு தகப்பன் சொல்லுறார். அப்பா அம்மா சொல்லுக் கேட்டு நடக்கிற பொடியன் எண்டு அவன்ர அப்பா பெருமிதத்தோட சொல்றார். என்ர பக்கத்திற்குச் சொல்லுறதைச் சொல்லிப்போட்டன். நம்பரையும் தந்திருக்கிறன். இஸ்டம் எண்டா நீ ஒருக்கா எடுத்துக் கதை. எதுக்கும் நீ விரும்பினால்தானே எதையும் மேற்கொண்டு செய்யலாம். நீ நல்லா யோசிச்சு முடிவை எடு. எங்கிட பக்கம் ஒரு நிர்ப்பந்தமும் இல்லை."

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல எல்லாவற்றையும் நிதானமாக அப்பா சொல்லி முடித்தது அவள் ஞாபகத்தில் வந்து போயின.

இந்த இலட்சணத்தில், நாவலின் பக்கங்களில் எப்படி மனம் லயிக்கும்?

இந்தச் சத்தியனுக்கு போன் பண்ணிறதில அப்படியொன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் என் கதையை எப்படிச் சொல்லவது? அதை எப்படி இந்தச் சத்தியன் ஏற்றுக் கொள்வார்?

சமீபத்தில் வந்துள்ள மணிரத்தினத்தின் புதிய திரைப்படத்தின் கதைதான் அவள் கதையும். தன் கதையைத்தான் படமாக்கினோரோ என்று அவள் படத்தைப் பார்த்த போது மனதுள் நினைத்துக் கொண்டாள்.

ஓ காதல் கண்மணி அதுதான் அந்தத் திரைப்டத்தின் பெயர். "லிவிங் டுகெதர் உறவு" என்ற ஐரோப்பிய கலாச்சார உறவைத்தான் தமிழ்த்திரைப்டமொன்றின் கருவாக எடுத்திருக்கின்றார் பழுத்த அனுபவசாலி இயக்குனரான மணிரத்தினம்.

நிவேதாவும் இப்படித்தான் நூலகமொன்றில் தொடங்கிய சந்திப்பொன்றை வீடுவரை இழுத்து வந்தாள். மிகச் சரளமாக ஆங்கிலம் பேசும் நிவேதாவுக்கும் டேவிட் என்ற அந்தக் கனடியருக்கும் நட்பு ஏற்பட்டதே இந்த ஆர்தர் ஹெய்லி என்ற நாவலாசிரியரால்தான்.

தொலைபேசி அழைப்புகள்,நேரடிச் சந்திப்புகள் என்று நட்பு வலுக்க, லிவ்விங்டுகெதர் என்ற முடிவுக்கும் இணக்கம் கண்டது அந்த ஜோடி. ஆனால் ஆறு மாத காலந்தான் அந்த நட்பு நீடித்தது.

நிவேதாவால் அப்படியொரு உறவை முழுமையாக ஜீரணிக்க முடியவில்லை. பெற் றோருக்கு ஒளித்து மறைத்து, இப்படியொரு வாழ்க்கை தேவைதானா என்று குற்றமுள்ள அவள் மனம் குறுகுறுத்தது.

இது சம்பவித்து வருடங்கள் மூன்றைத தாண்டிவிட்டாலும், பெற்றோரிடம் இதுபற்றி அவள் மூச்சு விடவேயில்லை.தன்மீது அளவுகடந்த பிரியம் வைத்திருக்கும் தன் பெற்றோரை அவள் காயப்படுத்த விரும்பவில்லை.

இணைந்தோம் வாழ்ந்தோம் பிரிந்தோம் என்று அந்த உறவு பழைய கதையாகி விட்டாலும், தமிழப் பெண்ணான அவளால், இதை மறக்க முடியவில்லை. இந்த சத்தியனிடம் இதை ஒளிக்கவே கூடாது என்று அவள் மனம் சொல்லியது.

இப்பொழுது அவளுள் எழுந்திருக்கும் கேள்வி. இதைப் பற்றிச் சொல்வதா விடுவதா? இந்தச் சத்யன் என்பவர் இதை எப்படி எடுத்துக் கொள்வார்? அப்பா வற்புறுத்தாவிட்டாலும், திருமணம் என்பதும் வாழ்க்கையில் அவசியமான ஒன்றுதான். அவர்களை நான் காக்க வைத்தது போதும். இனியும் இழுத்தடிக்க வேண்டாம் என்று அவள் தீர்மானித்திருந்தாள்.

ஆனால் அவளுக்குள் எழுந்த கேள்வி இந்த சத்யன் எப்படி இதற்குப் பதில் தருவார்?

எதற்கும் பேசித்தான் பார்ப்போமே. என்ன தலையையா துண்டிக்கப் போகின்றார்கள்?

நேரத்தைப் பார்த்தாள். இப்பொழுது இலண்டன் நேரம் காலை 11 மணியாக இருக்கும். இன்று ஞாயிறு . அங்கும் லீவு நாள்தானே. அப்பா தந்த இலக்கங்ளைப் பார்த்தபடி, அவள் அழகிய நீண்ட விரல்கள் சத்தியன் வீட்டுத் தொலைபேசி இலக்கங்களை அழுத்தத் தொடங்கின.

தயக்கம் என்பது ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைவரைதான் தொடர்கிறது. அதைத் தாண்டியதும், மனக்குழப்பம், தடுமாற்றம் எல்லாமே விரட்டியடிக்கப்பட, ஒரு புதுத் துணிவும் வேகமும் தொற்றிக்கொண்டு விடுகின்றது.

அந்த நிலையில்தான் இப்பொழுது நிவேதாவும் நிற்கிறாள்.

கார்த்திகேயன் இன்னமும் படுக்கையில் தான். மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. முதல் நாளிரவு மூக்கு முட்டக் குடித்துவிட்டு, உறங்கச் சென்ற போது நேரம் விடிகாலை இரண்டைத் தாண்டியிருந்தது.

வேலையில்லாமல் வீட்டில் இருப்பவர்கள் நிலை இதுதான். ஒழுங்குமுறை இவர்களது வாழ்வில் காணாமல் போய்விடுகின்றது. எத்தனை மணிக்கும் நித்திரைக்குப் போகலாம். எத்தனை மணிக்கும் நித்திரை விட்டெழும்பலாம். எதையும் செய்யலாம் எப்படியும் செய்யலாம் என்ற ஒழுங்கற்ற வாழ்க்கை! படுசோம்பேறிகளாக ஆளை மாற்றிவிடுவதுடன், எதையும் பிறகு செய்யலாம் என்று பின்போட வைக்கும் பழக்கத்தையும் கொண்டுவந்து சேர்த்து விடுகின்றது.

அந்த நிலையில்தான் இப்பொழுது கார்த்திகேயன் இருந்தார். அவருக்கு இனித்தான் காலைச் சாப்பாடு. இனி மதியச் சாப்பாடு என்று வரும்போது இது மாலைச் சாப்பாடாகி விடும். வரிசையாக நோய்கள் படையெடுப்பது, இந்த ஒழுங்கற்ற வாழ்க்கை முறையினால்தான்!

ஏ.ஜே.ஞானேந்திரன்

சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்து, படுக்கையைச் சீர்செய்துவிட்டு, காலைக் கடன்களையும் முடித்துக் கொண்ட கார்த்திகேயன், வசதியாக சோபாவில் உட்கார்ந்து கொண்டு, கோப்பியைப் பருகலானார்.

இன்று அறையை ஒரு முறை நன்றாகச் சுத்தம் செய்யவேண்டும் என்று நினைத்துக் கொண்டார். எதை இன்று சமைப்பது என்று நினைத்தவர், தன் குளிர்சாதனப் பெட்டியில் என்ன இருக்கின்றது என்று பார்த்துவர இருக்கையிலிருந்து எழுந்தார்.

மலிவு விலையில உணவுப் பொருட்கள் கிடைத்தால், எப்படியோ மோப்பம் பிடித்து, அவற்றை வாங்கி தன் குளிர்சாதனப் பெட்டியை நிரப்பி விடுவார். எப்பொழுதுமே ஒரு மானை முழுதாகப் பாம்பு விழுங்கியது போலத்தான் அவர் குளிர்சாதனப் பெட்டி காட்சியளிப்பதுண்டு. சமையலுக்கு அவருக்கு இறைச்சி வகைகளுக்குப் பஞ்சம் இருந்ததேயில்லை.

அவர் எழ எத்தனித்தபோது, யாரோ காலிங்பெல்லை அழுத்தும் சப்தம். தன் அறைச் சாரளமூடாக எட்டிப் பார்த்தார். இவருடைய இன்னொரு நண்பன் சுகந்தன் நின்றிருந்தான். எதற்கு வந்திருக்கிறான்? மனம் கேள்வி தொடுக்க, கைவிரல் கதவருகே இருந்த பட்டனை அழுத்தியது.

## கொட்டப்பெட்டிப் பெத்தாச்சி...

(13 பக்கத் தொடர்ச்சி)

அவள் பள்ளிச்சீருடையில், புத்தகப்பையைச் சுமந்தபடி எனக்கு அம்மா தலை இழுக்கிறா. இனி பின்னல் பின்னிச் சாப்பிட்டு பெத்தாச்சி முத்தத்தில தென்னம்பிள்ளை ஒண்டுக்க சட்டி பானைகளைக் கழுவிறா. 'ஆர் பிள்ளை மைதிலியா வா பிள்ளை உள்ளக்க" பெத்தாச்சி மைதிலியை அழைக்கிறா.மாதிக்கு தகப்பன் இல்லை. காலமை எதும் சாப்பிட்டுதோ தெரியாது. மீண்டும் அன்பாக கூப்பிடுகிறா மைதிலி தயங்கித் தயங்கி வந்து வீட்டு விறாந்தையில் இருக்கிறாள். மாதிலியின் முகம் வாடியிருப்பது பெத்தாச்சிக்கு விளங்கிவிட்டது. நான் சாப்பிட அமர அம்மாவைக் கூப்பிடுகிறா பெத்தாச்சி. "பிள்ளை மலர், அங்க குசினிக்க நான் சாப்பிட வைச்ச புட்டு ஓலைப்பெட்டியால மூடிவைச்சிருக்கிறன் ஒண்டுங் கேக்காமல் புட்டையுங் குடுத்து தண்ணியையும் குடு. மைதிலி சாப்பிடுவாள்" இரகசியமாய் பெத்தாச்சி கூற மைதிலி வேண்டாம் என்ற சின்ன மறுப்புடன் பின்னர் சாப்பிட்டு விட்டாள். பெத்தாச்சியின் அந்த செய்கை, மைதிலியின் முகத்தைப் பார்த்து நிலைமையை உணர்ந்து சாப்பிட வைத்த விதம் அப்பாடா நினைக்கவே உடம்பெல்லாம் சிலிர்க்குது.

இப்படித்தான் குமாரவேலுச் சின்னையாவோட வந்த இராசலிங்கத்தோட பெத்தாச்சி கதைக்கேக்க தன்ர தேப்பன் பேரனாக்களின்ர சிறப்புகளை எல்லாம் சொல்லுவா. அது அவைகள் பற்றின புழுகுகள் இல்லை என்பதும் எல்லாமே பெருமைக்குரிய விடயங்கள் என்பதும் தெளிவாகவே விளங்கும்.

'எட இராசலிங்கம் நீங்கள் இப்ப என்ன சாப்பாடெடா மோன சாப்பிடு கிறாய் அந்த காலத்தில எங்கட அப்பு கொழும்புத்துறை கடக்கரைக்குப் போய் நல்ல கொழுத்த, பல்லு விழுந்த கலவாய் மீன் வாங்கியந்து,குளம்புவைச்சு, பொரிச்சு, சொதிவைச்சுத் தருவினம் சாப்பிட்டா என்ன சொல்லும்" நினைவலைகளில் இருந்து மீண்ட நான், வாங்கி வந்த மீன்ரின்னை உடைப்பதற்காகக் கத்தியைத்தேடுகிறேன். மீண்டும் பள்ளிக்கூடங்களுக்கு ஓட வேணும் ரியூசன் வகுப்புகளுக்கும் ஓட வேணும் வெய்யில் கொதித்துக்கொண்டிருந்தது. பெத்தாச்சி நினைவலைகளில் இருந்து மீண்ட நான் நேரத்தைப் பார்க்கிறேன் இரண்டு மணியாய்ப் போச்சு பள்ளிக்குடம் விட்டிருக்கும். அடுப்பிலே அவிந்த படி இருந்த கறியை இறக்கிவைத்துவிட்டு பிறகு வந்து பாலை விட்டு காச்சுவம் என்று மனதில் நினைத்தபடியே வெளியே போகும் உடுப்பை அவசர அவசரமாக மாற்றுகிறேன்.ஏனிந்த அவசர வாழ்வு நிலை?ஏல்லோரையும் போலவே நானும் என்னுள் கேள்வியை எழுப்புகிறேன்.

கொட்டப்பெட்டிப் பெத்தாச்சியின் நினைவுகள் மீண்டும் மீண்டும் என் மனதில் தோன்றித் தோன்றி மறைகின்றன.

# அவுஸ்ரேலியா நோக்கி செல்லும் இலங்கை அகதிகளின் நிலை என்ன?



**நிறைமாத கர்ப்பிணிப் பெண் உட்பட 17 பெண்கள், 9 சிறுவர்கள் மொத்தமாக 44 இலங்கையர்கள், இந்திய கொடி ஏற்றப்பட்ட வள்ளத்தில் இந்தோனேஷியாவின் பாதுகாப்புப் படையினர் வள்ளத்தில் சென்றவர்களை சர்வதேச கடல் எல்லைக்குள் வழிஅனுப்பி வைத்துள்ளார்கள்.**

அந்த பயணிகளின் வள்ளம் சில நாட்களுக்கு முன்பு பலத்த காற்று வீசியதாலும், இயந்திர கோளாறு ஏற்பட்டதாலும் இந்தோனேஷியாவின் ஆச்சே மாகாணத்தின் லொஹொக்கா கடற்கரை பகுதியில் இருந்து 300 மீற்றர் தொலைவில் உள்ள பகுதிக்குள் வந்து ஒதுங்கியது.

அந்த வள்ளத்தில் வந்திருந்த யாருமே கடவுச்சீட்டு வைத்திருக்காத படியால் இந்தோனேஷியா குடிவரவு, குடிஅகல்வு பகுதியினர் தங்கள் நாட்டிற்குள் நுழைய அனுமதி மறுத்து விட்டார்கள்.

அதை அடுத்து குடிவரவு, குடிஅகல்வு பகுதியினர் அந்த வள்ளத்தை பழுது பார்த்து அவர்கள் பயணத்துக்கு தேவையான போதிய எரி வாயுகளும் வழங்கி அதை தமது எல்லைக்கு அப்பால் பொலிஸ் பாது காப்புடன் சர்வதேச எல்லைகுள் செல்ல வழியனுப்பி வைத்தார்கள்.

இந்த வள்ளம் தற்சமயம் அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை நோக்கி சென்று கொண்டிருப்பதாக கடைசியாக கிடைத்த தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதற்கிடையில் அவுஸ்ரேலியா அதன் எல்லைக்குள் வரும் வள்ளங்களை தடுத்து நிறுத்தி அந்த வள்ளங்களை பப்புவா நியூ கினியா மற்றும் பசுபிக் சமுத்திரத்தில் உள்ள சிறிய நவுறு தீவுகளுக்கு அழைத்து சென்று அங்கு காவலில் வைக்கிறார்கள்.

இவ்வாறு காவலில் வைக்கப்படுபவர்கள் அகதி கோரிக்கை சம்பந்தப்பட்ட தீர்மானம் மாதக்கணக்கில், அனேகமாக வருடக்கணக்காக இழுத்தடிதுக்கொண்டே போகிறது.

எனவே தற்சமயம் கிறிஸ்மஸ்தீவை நோக்கி செல்லும் 44 இலங்கையர்களின் கதி என்ன? அந்த வள்ளத்தில் உள்ள நிறைமாத கர்ப்பிணி பெண், சிறுவர்களின் நிலை என்ன என்று தெரியவில்லை.

இவர்களுக்கு அகதி தஞ்சம் கிட் டுமா? அல்லது அவர்கள் திருப்பி அனுப்பப் படுவார்களா? அவ்வாறாயின் எங்கே அனுப்பப்படுவார்கள் ஒன்றுமே புரியவில்லை.



# ஆன்மீகம்



## கோவிலில் வழிபடும் அனைவருக்கும் பலன் கிடைக்குமா?

கோயிலுக்குச் செல்லும் எல்லாருக்கும் பலன் கிடைக்கிறதா என்றால் ஓரளவுக்கு கிடைக்கிறது. காரணம், திரிகரண சுத்தியுடன் இறைவனை யாரும் வணங்குவதில்லை.

**திரிகரணசுத்தி என்றால் என்ன?**


மனிதனுக்கு பொறாமை, கோபம், ஆசை, பகை முதலிய குணங்கள் உள்ளன. இவற்றை தியானம் என்ற தீர்த்தத்தாலும், பொய், கோள்மூட்டுதல், தீயசொல் ஆகியவற்றை ஸ்லோகங்கள், பாடல்கள் உள்ளிட்ட துதி என்னும் தீர்த்தத்தாலும், களவு, கொலை, பிறன்மனை காணுதல் ஆகிய அழுக்குகளை அர்ச்சனை என்ற தீர்த்தத்தாலும் கழுவ வேண்டும்.

இதுவே திரிகரணசுத்தி எனப்படுகிறது.

இவற்றையெல்லாம் கழுவாமல், ஆயிரங்களையும், லட்சங்களையும் கொட்டி பூஜை செய்வதால் பயனேதும் இருக்காது. எல்லாரும் பலனடைய வேண்டுமானால் திரிகரணசுத்தி செய்யுங்கள். ஞான நிலையை அடையுங்கள்

## சிவபெருமானுக்கு உகந்த விரத வழிபாடுகள்

சிவபெருமானை எட்டு வகையான விரதங்கள் இருந்து வழிபட்டு அவரது பரிபூரண அருளைப் பெறலாம்.



1. சோமவார விரதம் - திங்கள் கிழமைகளில் இருப்பது
2. உமா மகேஸ்வர விரதம் - கார்த்திகை பவுர்ணமியில் இருப்பது
3. திருவாதிரை விரதம் - மார்கழி மாதத்தில் வருவது
4. சிவராத்திரி விரதம் - மாசி மாதம் அமாவாசை தினத்தில் வருவது
5. கல்யாண விரதம் - பங்குனி உத்திரத்தன்று கடைபிடிப்பது
6. பாசுபத விரதம் - தைப்பூச தினத்தில் வருவது
7. அஷ்டமி விரதம் - வைகாசி மாதத்தில பூர்வபட்ச அஷ்டமி தினத்தில் அனுஷ்டிப்பது
8. கேதார கவுரி விரதம் - ஐப்பசி அமாவாசையை ஒட்டி (தீபாவளி தினத்தில்) இருக்கும் விரதம்.



## சேவல் கொக்கரக்கோ என்று கூவுவதன் பொருள்

கஷ்யப முனிவரின் புத்திரனான சூரபத்மன் என்னும் அசுரன், விண்ணுலக தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். அவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். இறைவன், தன் நெற்றிக் கண்ணில் இருந்து ஆறு நெருப்புப்பொறிகளை உருவாக்கினார். அவை கங்கையில் தவழ்ந்து குழந்தைகளாக மாறின.

ஆறுகுழந்தைகளும் இணைந்து "கந்தன் என்னும் மாபெரும் சக்தியாக வடிவெடுத்தது. அன்னை பராசக்தி, தன் சக்தியை ஒன்று திரட்டி அடக்கிய வேல் ஒன்றை மகன் கந்தனிடம் வழங்கினாள். சக்திவேலை ஏந்திய கந்தன் அழகில் மன்மதனையும் மிஞ்சியதால் "முருகன் எனப்பட்டான். "முருகன் என்றால் அழகன். அவன் சூரனுடன் போருக்குப் புறப்பட்டான். சிறுவா! பால் மணம் மாறாத பாலகனான நீயா என்னுடன் போருக்கு வந்தாய்! போய் விடப்பா! என்று ஆணவத்துடன் கருணையை குழைத்துப் பேசுவது போல சூரபத்மன் சிரித்தான். ஆனால், முருகனின் தாக்குதலில் நிலைகுலைந்து போனான். முருகன் வேலாயுதத்தை ஏவிவிட்டார்.

அக்னிமழையைப் பொழிந்தபடி வேல், சூரனை அழிக்கப் பாய்ந்தது. பயந்து போன சூரபத்மன், ஒரு கடலின் நடுவே பெரிய மாமரமாக உருவெடுத்து நின்றான். அம்மரத்தை முருகனின் வேல் இரண்டு கூறாக பிளந்தது. அதன் ஒருபாதியை சேவலாகவும், மறுபாதியை மயிலாகவும் மாற்றி அருள்புரிந்தார் முருகன். நீலமயிலை வாகனமாக்கிக் கொண்டார். சேவலை கொடியாக ஆக்கிக் கொண்டார். அதிகாலை விடியல் வேளையில் சேவல் "கொக்கரக்கோ என்று சொல்லி முருகப்பெருமானுக்கு நன்றி தெரிவிக்கும்." கொக்கு அறு கோ என்பதைத் தான் சேவல் "கொக்கரக்கோ என்று கூவி அழைக்கிறது. கொக்கு என்றால் "மாமரம், கொக்கரக்கோ என்பதற்கு "மாமரத்தை இருகூறாக்கிய மன்னவனே என்பது பொருளாகும். சேவலைக் காலையில் தரிசித்தால் முருகனின் அருள் கிடைக்கும்.






தனுஷ் தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவராவார். இவர் இதுவரையில் 37 படங்களில் நடித்து விட்டார். இவரது 36 ஆவது படம் தொடரி 37 ஆவது படம். அடுத்த படம் கௌதம்மேனனின் என்னை நோக்கி பாயும் தோட்டா. துள்ளுவதோ இளமை யில் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுக மானார். பாரிய வெற்றி பெற்ற இத் திரைப் படத்தைத் தொடர்ந்து தனுஷ் செல்வராகவனின் இயக்கத்தில் நடித்த காதல் கொண்டேன் திரைப்படமும் வெற்றிப்படமாக அமைந்தது

| | |
|---|---|
| பிறப்பு | : ஜூலை 28, 1984 |
| பிறப்பிடம் | : சென்னை, தமிழ்நாடு, இந்தியா |
| பணி | : நடிகர், பின்னணிப் பாடகர், பாடலாசிரியர், தயாரிப்பாளர் |
| நாட்டுரிமை | : இந்தியன் |

இத்திரைப்படத்தின் மூலமாக தனுஷ் ஒரு சிறந்த நடிகர் என்ற பாராட்டையும் பெற்றுக் கொண்டார். இதன் பிறகு வெளியான திருடா திருடி மற்றும் தேவதையைக் கண்டேன் போன்ற திரைப்படங்களின் மூலமாக தனது திரையுலக செல்வாக்கை நிலைநிறுத்திக் கொண்டார்.

இவர் ஆடுகளம் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக 2011 இல் சிறந்த நடிகருக்கான இந்திய தேசிய விருதைப் பெற்றார். 3 என்ற தமிழ் திரைப்படத்திற்காக 2011 ஆம் ஆண்டு இறுதியில் இவர் பாடிய "வொய் திஸ் கொலவெறி டி" என்ற பாடல் யூடியூப் இணையதளத்தில் வெளியாகி சில மணி நேரங்களிலேயே அதிகம் பேரால் பார்வையிடப்பட்டதால் ஓரிரு நாட்களில் தேசிய அளவில் பேசப்பட்டார்.

தனுஷ் தமிழ்த் திரைப்பட இயக்குனர் கஸ்தூரிராஜாவின் இரண்டாவது மகனும் இயக்குநர் செல்வராகவனின் இளைய சகோதரரும் ஆவார். இவர் 2004 ஆம் ஆண்டில் நடிகர் ரஜனிகாந்தின் மகள் ஐஸ்வர்யாவைத் திருமணம்செய்துகொண்டார். அவர்களுக்கு யாத்ரா மற்றும் லிங்கம் என்ற இரு மகன்கள் இருக்கிறார்கள்.

### ஆரம்ப வாழ்க்கையும், கல்வியும்

அவர், தனது பள்ளிப்படிப்பை சென்னையில் உள்ள ஆழ்வார்த் திருநகரில் இருக்கும் செயின்ட் ஜான்ஷஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் தொடர்ந்தார். தனது 12 ஆம் வகுப்பை வெற்றிகரமாக முடித்த அவரை, அவரது சகோதரரும், இயக்குனருமான செல்வராகவன் அவர்கள், திரையுலகில் நுழையுமாறு வற்புறுத்தியதால், அவர் தனது படிப்பை அத்துடன் நிறுத்திக் கொள்ள விரும்பினார்.

பாலிவுட்டில் தனுஷ் 2013, அவர் ஆனந்த் எல். ராய் அவர்கள் இயக்கிய பாலிவுட் திரைப்படமான 'ரஞ்சனா' என்ற படத்தில் நடிகை சோனம் கபூருடன் இணைந்து நடித்தார். வெளியான ஒரே வாரத்திலேயே 34 கோடி வசூல் சாதனைப் படைத்து, அமோக வெற்றிபெற்ற அப்படத்தை, 'பாக்ஸ் ஆஃபிஸ் ஹிட்' என்று அறிவித்துள்ளது. மேலும், அவரை ஹிந்தித் திரையுலகிலும் ஒரு அற்புத நடிகரென்ற முத்திரையைப் பதிக்கச் செய்தது.

### பிற சாதனைகள்

நடிகராகப் பெரிதும் சாதித்த அவர், தான் நடித்த ஒரு சில படங்களில் பாடல்கள் பாடி வந்தார். அவர் பாடிய அனைத்து பாடல்களும் பிரபலமாகி, மக்களிடையே வரவேற்பையும் பெற்றுத் தந்தது எனலாம். அவ்வாறு பாடியதே, அவரை சுயமாகப் பாடல்கள் எழுதவும் தூண்டியது. அவரது அண்ணன் செல்வராகவன் இயக்கத்தில் வெளியான 'மயக்கம் என்ன' திரைப் படத்தில் அவர், 'பிறைத் தேடும் இரவிலே', 'ஓட ஓட' மற்றும் 'காதல் என் காதல்' போன்ற பாடல்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய அனைத்துப் பாடல்களுமே வெற்றி பெற, அவர்

அவரது மனைவி யான ஐஸ்வர்யா ரஜினி காந்த் இயக்கியப் படமான '3' (2012) படத்தில், அனைத்து பாடல்களையும் எழுதினார். அவர் எழுதிப் பாடிய பாடலான 'ஒய் திஸ் கொலவெறி கொலவெறி கொலவெறிடி' என்ற பாடல், யூட்யூப் இணையத்தளத்தில் வெளியாகி, சில மணி நேரங்களிலேயே அதிக ளவில் பார்வையிடப்பட்டதால், ஓரிரு நாட்களிலேயே தேசிய அளவில் புகழ்பெற்றார். இதைத் தொடர்ந்து, அவர் 'எதிர் நீச்சல்' (2013) படத்தில் 'நிஜமெல்லாம்', 'பூமி என்னை சுத்துதே' மற்றும் 'மரியான்' (2013) படத்தில் 'கடல் ராசா நான்' போன்ற பாடல்களையும் எழுதியுள்ளார்.

நடிகர், பாடகர், பாடலாசிரியர் எனப் பன்முகம் கொண்ட அவர், '3' (2012) மற்றும் 'எதிர் நீச்சல்' (2013) போன்ற படங்களைத் தயாரித்து, ஒரு சிறந்த தயாரிப்பாளர் என்றும் தன்னை நிரூபித்துள்ளார்.

# மலையக மக்களின் அவலநிலை

(க. கிஷாந்தன்)





மலையகத்தில் உள்ள அதிகமான தோட்டங்களில் என்றும் இல்லாதவாறு மண்சரிவு எச்சரிக்கையின் காரணமாக ஒவ்வொறு நொடியும் குடியிருப்பு பகுதிகளில் வாழும் இம்மக்கள் தனது உயிரினை கையில் பிடித்துகொண்டு பீதியுடன் நிம்மதியற்ற நிலையில் வாழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

மழை, வெயில், காற்று, விஷப் பாம்புகள், குளவிதாக்குதல், சிறுத்தையின்நடமாற்றம்என பல ஆபத்துக்களை சந்தித்து தனது வயிற்றுப் பசியை நிறைவேற்றிக் கொள்வதற்காக உழைக்கும் தோட்ட தொழிலாளர்கள் நிம்மதியாக உறங்க முடியாத நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். அத்தோடு குடும்பமே சந்தோஷத்தினை இழந்து வாழ்வதை காணக்கூடியதாக உள்ளது.

அந்தவகையில் அக்கரபத்தனை டொரிங்டன் பிரிவில் ஒன்றான அலுப்புவத்தை என்ற தோட்டம் மன்றாசி நகரத்தில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இத்தோட்டத்தினைபற்றிஅதிகமானவர்களுக்கு தெரிந்திருக் வாய்ப்பில்லை. இத்தோட்டத்தில் எவ்வித அடிப்படை வசதிகள் இல்லாமல் மக்கள் வாழ்ந்து வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

அடிப்படை வசதிகளில் ஒன்றான போக்குவரத்துப் பாதை மிகவும் மோசமான நிலையில் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றது. வெள்ளையர்களின் காலத்தில் கட்டப்பட்ட லயன் அறைகள் 30 வருடங்களாக கூரை தகரம் மாற்றப்படாமல் மழைக் காலங்களில் மழை நீரை அப்புறப்படுத்துவதற்காக பல்வேறுபட்ட இடர்களை சந்திப்பதாக இத்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கூரை தகரம் மாற்றி கொடுக்காத காரணத்தால் அதிகமான வீடுகளில் கறுப்பு றபர் சீட்டுக்கள் போடப்பட்டுள்ளது. கடந்த மாதம் பெய்த கடும் மழையினால் 11 வீடுகளை கொண்ட லயன் தொகுதியில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இப்பகுதியல் வீடுகள் இல்லாமல் தற்காலிக வீடுகளில் வாழ்ந்தவர்களின் வீடுகள் சரிந்து விழுந்துள்ளது. இக்குடும்பங்களை சேர்ந்தவர்கள் தற்போது தோட்டத்தில் உள்ள சிறுவர் நிலையத்தில் தங்கியுள்ளனர்.

ஆனால் இவர்களுக்கு எவ்வித நிவாரண உதவிகளையும் வழங்கவில்லையென பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். அத்தோடு தொழிற்சங்க அதிகாரிகள் மற்றும் தோட்ட நிர்வாகம் மலையக அரசியல்வாதிகள் எவ்வித நடவடிக்கை மேற்கொள்ள வில்லையென இவர்கள் தெரிவிக்கின்றனர். இக்குடியிருப்பு பகுதிக்கு செல்லும் பிரதான பாலம் உடைந்த நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் இதே வேளை பலர் தவறி விழுந்துள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

குடியிருப்புகள் அமைந்துள்ள பின்புறத்தில் பாரிய மண்மேடு உள்ளதால் எப்போது சரிந்து விழும் என்ற அச்சத்தில் இவர்கள் வாழ்வதாகவும் இப்பகுதியில் மொத்தமாக 70 இற்கு மேற்பட்டவர்கள் மண்சரிவு ஏற்படலாம் என்ற நிலையில் உள்ளனர் என பாதிக்கப்பட்ட தமக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# காங்கேசன்துறை சீமெந்து...

காங்கேசன்துறை தொழிற்சாலை மொத்தமாக 650 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. இவ் வாறு இந்தக் காணியில் 65 ஹெக்டேயர் நிலத்தில் 400 குடும்பங்களையும் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. விரைவில் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை கைத்தொழில் அமைச்சர் நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தன.

இது சம்பந்தமாக யாழ் மாவட்ட செயலர் என். வேதநாயகனுடன் தொடர்பு கொண்டு குடியேற்றத்திற்காக சிமெந்து தொழிற்சாலை நிலங்களை எடுத்தால் சீமெந்து தொழிற்சாலை அமைப்பது பாதிக்கப்படாதா? என தினச்செய்தி கேட்டபோது அதற்கு பதிலளிக்கையில் சென்ற ஏப்ரல் 25 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில்தொழிற்சாலைக்கு தேவையான சுண்ணாம்புக் கற்கள் இங்கே அகழ்வதில்லை என்றும் அதற்குப் பதிலாக அந்தத் தேவையை வெளி நாட்டிலிருந்து பூர்த்தி செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. எனவே சீமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள காணிகளை குடியேற்றத்திற்கு எடுப்பதால் தொழிற்சாலை வேலைக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது எனக் கூறினார்.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் 65 ஹெக்டேயர் நிலத் தையும் இந்தத் தேவைக்கு பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. மொத்தமாக மிஞ்சிமிஞ்சி போனால் 18 ஹெக்டேயர் நிலத்தில் தான் மக்களை குடியமர்த்த முடியும் என்று கூறினார்.


# விளையாட்டு

# வடக்கின் வல்லவன்



தினச்செய்தியின் அனுசரணையில் நெற்கொழு கழுகுகள் நடத்தும் வடமாகாண வல்லவன் உதை பந்தாட்டப் போட்டியில் ஊரெழு ரோயல் நசரேத், கில்லரி ஆகியன மூன்றாம் சுற்றுப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றன.

ஊரெழு ரோயல், மெலிஞ்சிமுனை இருதயராஜா ஆகியவற்றுக்கு இடையேயான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் ரோயல் வெற்றி பெற்றது. போட்டியின் 34 ஆவது நிமிடத்தில் ரோயல் வீரர் பிரசன்னா முதலாவது கோலை அடித்து வெற்றிக் கணக்கை ஆரம்பித்தார். தொடர்ந்து 41 ஆவது நிமிடத்தில் ரோயல்




வீரர் கஜகோபன் இரண்டாவது கோலை அடிக்க 2-0 என்ற கோல் கணக்கில் முதற்பாதி ஆட்டத்தில் ரோயல் முன்னிலை பெற்றது.


இரண்டாவது பாதி ஆட்டத்திலும் ரோயல் வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். 75 ஆவது நிமிடத்தில் உயர்ந்து வந்த பந்தை நிதர்சன் தலையால் முட்டி கோலாக மாற்றினார். ஆட்ட நேர முடிவில் 3-0 என்ற கோல் கணக்கில் ஊரெழு ரோயல் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ரோயல் கழக வீரன் பிரசன்னா தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப் பரிசையும் பதக்கத்தையும் தொழில் நுட்பவியல் கல்லூரி தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் வே. சபேசன்



வழங்கி கௌரவித்தார்.

நசரேத் விளையாட்டுக் கழகத்துக்கு எதிரான போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றில்




விளையாடத் தகுதி பெற்றது.

முதற்பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் விண்மீன் வீரர் காண்டீபன் முதலாவது கோலைப் பதிவு செய்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் 58 ஆவது நிமிடத்தில் விண்மீன் கழக வீரர் காண்டீபன் மீண்டும் ஒரு கோலை அடித்தார். போட்டியில் வெற்றிபெற நசரேத் கடுமையாக போராடிய போதும் அனுபவம் வாய்ந்த நான்கு வீரர் கள் விளையாடாமையினால் அந்த அணியால் பதில ளிக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் 2:0 என பலாலி விண்மீன் வெற்றிபெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக விண்மீன் கழக வீரர் காண்டீபன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப் பரிசையும் பதக்கத்தையும் ஓய்வுபெற்ற ஆசிரியர் தா. சதாசிவம் வழங்கி கௌரவித்தார்.


ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கு எதிரான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற மன்னார் கில்லரி விளையாட்டுக்கழகம் மூன்றாவது சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது. பலம்வாய்ந்த இரண்டு அணிகள் மோதியதால் ரசிகர்க ளின் ஆர்வம் மேலோங்கியது.

முதற்பாதி ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் கில்லரி வீரர் டிலக்சன் கோல் அடித்தார்.



இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஐக்கிய விளயாட்டுக் கழகத்துக்குக் கிடைத்த பெனால்ரியை ஜோன்சன் கோலாக மாற்றினார்.

84 ஆவது நிமிடத்தில் கிலரி வீரர் கோல் அடித்தார். மன்னார் கில்லரி கழகம் 21 என்ற கோல் கணக்கில்




வெற்றி பெற்றது.


போட்டியின் ஆட்டநாயகனாக பல கோல் வாய்ப் புக்களை தடுத்த கில்லரி வி.க. கோலி சரன் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான பண பரிசை மூத்த உறுப்பினர் சி. தேவராசா வழங்க பதக்கத்தை கழக நலன்விரும்பி செ. அற்புதராசா வழங்கி கௌரவித்தார். வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் மன்னார் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆகியவற்றுக்கிடையேயான போட்டியில். 21 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி வெற்றி பெற்றது.



இப் போட்டியில் முதலாவது கோலினை ஐக்கிய வி.க அலெக்ஸ் அடித்தார். பின்னர் போட்டியின் 39 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி வீரர் மருன் அடித்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் 75 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தியின் மூத்த வீரர் குகராசா கோல்அடிக்க ஆதிசக்தி வி.க 2:1 என வெற்றியீட்டியது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஆதிசக்தி வி.க. மூத்த வீரரான குகராசா தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசையும் பதக்கத்தையும் தொல்பொருள் திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தர் செ. அமர்நாத் வழங்கி கௌரவித்தார்.



தினச்செய்தி
என்றும் உங்களுடன்

காட்ட விரும்பவில்லை. அப்படி அடையாளம் காட்டினால் அவர்களது நோக்கம் நிறைவேறிவிடும்.

எப்பொழுதும் நாம் நல்லவற்றையே நினைக்கிறோம். நல்லவற்றையே செய்கிறோம். எமது சொந்தங்களை நாம் நினைவு கூருவதை யாராலும் தடை செய்ய முடியாது.

இறந்த எமது உறவுகளை நினைவு கூருவதற்கு தினச்செய்தி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தடைசெய்ய ஒரு சிலர் முயற்சிக்கின்றனர். அவர்களின் முயற்சி வெற்றிபெற மாட்டாது என்பதை தினச்செய்தி அழுத்தம் திருத்தமாகத் தெரிவிக்கின்றது.

# தினச்செய்தியின் முயற்சியே முள்ளிவாய்க்கால் தூபி யாரிடமிருந்தும் பணம் பெறவில்லை

முள்ளிவாய்க்காலில் நமது சொந்தங்களுக்காக நினைவுத்தூபி அமைக்கும் தினச்செய்தியின் நின்மாணப்பணிக்கு இதுவரை வேறிடங்களில் இருந்து ஒரு ரூபா கூட அன்பளிப்பாகவோ, நன்கொடையாகவோ அல்லது வேறுவிதத்திலோ பெறவில்லை. வரும் காலத்திலும் இந்த நிர்மாணப் பணிக்காக யாரிடம் இருந்தும் பணம் சேகரிக்கும் திட்டம் இல்லை.

ஏற்கனவே நாம் கூறியதுபோல தினச்செய்தி நிர்மாணிக்கும் நினைவுத்தூபியே அன்றி வேறு எவரும் பங்குபற்ற நாம் அனுமதிக்கப் போவதில்லை என்பதை மிகத் தெளிவாக நாம் குறிப்பிட விரும்புகிறோம். நினைவுத்தூபி அமைக்கும் திட்டத்தை நாம் எவரையும் நம்பி ஆரம்பிக்கவில்லை. திட்டத்தை அறிவித்துவிட்டு யாரிடமும் பணம் கோருவது நமது நோக்கமல்ல. தினச்செய்தி ஏசியன் ரிபியூன் இணையதளம் ஆகியன இணைந்தே நினைவுத்தூபியை அமைக்க உள்ளன. இவை இரண்டுக்கும் கே.ரி. ராஜசிங்கம் பிரதம ஆசிரி யராகக் கடமையாற்றுகிறார். எனவே யாரிடமும் பணம் வாங்கி நமது சுதந்திரத்தை அடமானம் வைக்க நாம் தயாராக இல்லை என்பதை இந்த இடத்தில் மிகத் தெளிவாக கூறவிரும்புகிறோம்.

நினைவுத்தூபியை அமைப்பதற்கு மனமுவந்து செய்த அமிர்தலிங்கத்துக்கு நாம் என்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம். சேவை என்பது சொந்தப் பணத்தில் செய்வதே தவிர ஊரார் பணத்தில் செய்வதல்ல. ஊரார் பணத்தில் செய்தால் அது வியாபாரம். அப்படியான வியாபரத்தை நாம் செய்ய மாட்டோம் என்பதை தினச்செய்தி தெரிவிக்க விரும்புகிறது.

குற்றம் கூறுவதையும், பிழை பிடிப்பதையும் நோக்கமாகக் கொண்டு சில இணையத் தளங்கள் செயற்படுவது போல் தெரிகிறது. அப்படியான இணைய தளங்களை நாம் அடையாளம்




## பழம்பெரும் தொழிற்சங்க தலைவர் அலவி மௌலானா காலமானார்



அதன் பின் கொழும்பு மாநகரசபை உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.

1994 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு ஊடகத்தறை உதவி அமைச்சராகவும் மாகாண சபை உள்ளூராட்சி சபை அமைச்சராகவும் 2001 ஆம் ஆண்டு தொழிலமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதி மேல்மாகாண சபையின் 5 ஆவது ஆளுநராக நியமிக்கப்பட்டார். நீண்ட காலமாக ஆளுனராக இருந்து 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதையடுத்து தன்னுடைய ஆளுனர் பதவியை ராஜினாமா செய்தார். அஹமட் ஸெய்யத் அலவி மௌலானா பம்பலப்பிட்டி கல்லூரியிலும், மருதானை ஷாகிரா கல்லூரியிலும் கல்வி கற்றார்.

தொழிற்சங்க தலைவராகவும், முன்னாள் மேல் மாகாண ஆளுனராக இருந்த அலவி மௌலானா சென்ற புதன்கிழமை காலமானார்.

சென்ற திங்கட்கிழமை ஈரல் சம்பந்தமாக ஒரு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அதனையடுத்து அவர் காலமானதாக குடும்பத்தினர் தினச்செய்திக்கு தகவல் தந்தார்கள்.

இந்தப் பழம் பெரும் அரசியல்வாதி 1948 ஆம் ஆண்டு தொழிற்சங்க வேலையில் ஈடுபட்டார்.

## வேலு ஜீவராஜ் என்பவருக்கும் தினச்செய்திக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை



துளசிக் குளம் வவுனியாவில் வசிக்கும் வேலு ஜீவ ராஜ்க்கும் அ.அ.இ. - 781141682V (தினச் செய்திக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.)

தினச்செய்தி சம்பந்தமாக இவருடன் கொடுக்கல் வாங்கல் செய்திருந்தால் செய்தால் அதற்கும் தினச்செய்திக்கும் எந்தவிதமான தொடாபும் கிடையாது. இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு சகலரையும் கேட்டுக் கொள்கிறோம்.

18.06.2016 தினச்செய்தி

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜூன் 17, 2016 அன்று வெளியிடப்பட்டது.